**JAI-NUL JEWELLERS**

கைதேர்ந்த தொழிலாளர்களினால்
நங்கையர்கள் விரும்பும்
நவநாகரிக டிசைன்களில்
சுத்தமான 22 கரட் தங்கத்தினால்
தங்க நகைகளை செய்து தரும்
தலைநகரில் தலைசிறந்த
ஒரே இடம்:

**ஜெய்-நுல்**
**நகை மாளிகை**

3, செட்டியார் தெரு சந்தி,
கொழும்பு — 11
தொலைபேசி: 549477



# தினபதி

ரூ 2/=

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல. 4588 1984 ஜூன் 21 வியாழக்கிழமை ★ ★ ★ தினபதி



**JAI-NUL JEWELLERS**

மாணிக்க கற்கள்,
வைர மோதிரங்கள்,
வைர நெக்லஸ்கள், என்டிக்
சாமான்கள் வகைகளுக்கும்
நயம், நாணயம், நம்பிக்கைக்கு
சிறந்த இடம்:

தலைமையகம்:—

**ஆப்தீன்**
**ஜுவலர்ஸ்**

இல. 24, ஜனாதிபதி மாவத்து
கொழும்பு — 1.
தொலைபேசி: 547431 — 21612.


நாகபட்டணத்திலிருந்து கொழும்புக்கு

# வெங்காயம் ஏற்றி வந்த சிங்கைக் கப்பல் கடலில் மூழ்கியது

## யாழ். கப்பல் மாஸ்டரும் மாலுமிகள் 7 பேரும் லுனுவையில் கரை சேர்ந்தனர்

### சம்பவம் பற்றி பூரண விசாரணை நடத்த வர்த்தக அமைச்சர் உத்தரவு

கொழும்பு, ஜூன் 21

நாகபட்டணத்திலிருந்து கொழும்புக்கு 540 தொன் பம்பாய் வெங்காயத்தை ஏற்றி வந்த சிங்கப்பூர்க் கப்பல் கடலில் மூழ்கியது. கப்பல் மாஸ்டரும், மாலுமிகள் ஏழு பேரும் யாழ்ப்பாணத்துவர்கள்,



வர்த்தக, கப்பற்றுறை அமைச்சர் திரு. எம். எஸ். அமரசிறி மூழ்கிய கப்பலின் மாஸ்டருடனும் கப்பல் மாலுமிகளுடனும் பேசுவதைப் படத்தில் காணலாம். ஏ. எஸ். பி. சிவரத்தினமும் அருகில் காணப்படுகிறார். மொரட்டுவை பொலீஸ் நிலையத்தில் இப்படம் எடுக்கப்பட்டது. (த—ச)



## குவைத்தில் இறந்த இலங்கையர்

### உறவினருடன் தொடர்பு கொள்ள அமைச்சு முயற்சி

குவைத்தில் பணிபுரிந்த யூஸூப் நஸார் முகம்மது அலி என்ற இலங்கையர் திடீர் விபத்தொன்றில் மரணமானார் என்று, வெளிவிவகார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவரின் உறவினர்கள் பற்றிய தகவல்களைப் பெற முடியவில்லை.

ரத்தோட்டை, திக்கும்புரை, சாகுல் ஹமீத் சப்ஜான் என்பவரே மரணமானவரின் தந்தை என்று கூறப்படுகின்றது.

இறந்தவரின் வீட்டு முகவரி தெளிவில்லாமல் இருப்பதால் மேற்படி சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்க முடியாத நிலையில் இருப்பதாக, வெளிவிவகார அமைச்சு அறிவிக்கின்றது.

இறந்தவர்களின் உறவினர்கள் உடனடியாக வெளிவிவகார அமைச்சுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (த—11)

## திணைக்கள ஊழியர் உட்பட மூவர் கைது

சுகாதார திணைக்களத்தின் சிரேஷ்ட எழுதுவினைஞர் ஒருவர் உட்பட மூவர் லஞ்ச திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இதுபற்றி தெரிய வருவதாவது:—

வேலை வங்கி மூலம், தாதிகளாக சேர்த்துக் கொள்ள, நேர்முக பரீட்சை நடத்த சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களை. [illegible] பகுதியில் அரசாங்க பாடசாலையில்

பூர்க் கப்பல் கடலில் மூழ்கியது. கப்பல் மாஸ்டரும், மாலுமிகள் ஏழு பேரும் யாழ்ப்பாணத்தவர்கள். அவர்கள் லுணுவையில் கரை சேர்ந்தனர்.

இப்போது நாட்டில் அவசரமாகத் தேவைப்ப டும் வெங்காயம், கப்பல் மூழ்கியதால் கடலுக்குள் போய் விட்டது. இந்தச் சம்பவம் குறித்து பூரண விசாரணை நடத்துமாறு வர்த்தக, கப்பல் துறை அமைச்சர் எம். எஸ். அமரசிறி உத்தரவிட்டிருக்கிறார்.

வெங்காய தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு, வர்த்தக அமைச்சும், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையமும் மிக அவசரமாக இந்தியாவில் இருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்திருந்தன.

வெங்காயம் கொண்டு வர இருந்த 5 கப்பல்களில் மூழ்கிப் போன கப்பலும் ஒன்றாகும்.

இந்த கப்பல் நேற்று முன் தினம் இரவு கொழும்பு துறை முகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்பட்டது.

கொண்டு வரப்படும் வெங்காயத்தை கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் உடனடியாக விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனினும் கப்பல் எதிர்பாராத விதமாக, செவ்வாய்க்கிழமை இரவு 10.30 மணி அளவில் லுணுவை கடற்கரைக்கு அப்பால் மூழ்கியது.

இக்கப்பலின் மாஸ்டர்,

(2ஆம் பக்கம் பார்க்க)



மூழ்கிய கப்பலில் இருந்து எடுக்கப்பட்ட வெங்காயத்தை மீனவர்கள் கரைக்கு கொண்டு வரும் காட்சி. (த—ச)

தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களை. மத்துகமை பகுதியில் அரசாங்க பாடசாலையில் ஆசிரியராகப் பணி புரியும் ஒருவர் பெற்றுக் கொண்டார்.

மத்துகமை பகுதியில் உள்ள ஒரு யுவதியிடம் நியமனம் பெற்றுத் தருவதாகக் கூறி, 3,500 ரூபாவை லஞ்சமாக கேட்டார்.

இது குறித்து லஞ்சத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டது. சந்தேக நபரான ஆசிரியர் 3,500 ரூபாவை யுவதியிடம் இருந்து லஞ்சமாக பெறும் போது, லஞ்சத் திணைக்கள அதிகாரிகள் அவரை கைது செய்தனர்.

சந்தேக நபருக்கு உதவி

(2ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு உதவும் நாடுகள் கூட்டம் இன்று பாரிஸில் ஆரம்பமாகிறது

பாரிஸ், ஜூன் 21

இலங்கைக்கு உதவும் நாடுகளின் குழுக் கூட்டம், இன்று பிரான்சின் தலைநகரான பாரிஸில் ஆரம்பமாகின்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக, நிதி திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டீ மெல், நேற்று வாஷிங்டனிலிருந்து பாரிஸ் வந்து சேர்ந்தார்.

அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான், இத்தாலி, கனடா, ஆஸ்திரேலியா, நோர்வே, சுவீடன், டென்மார்க், பின்லாந்து, நெதர்லாந்து, பெல்ஜியம், இந்தியா, ஆஸ்திரியா ஆகிய 16 நாடுகள் இக்கூட்டத்தில் பங்குபற்றுகின்றன.

மற்றும் சர்வதேச நாணயச் சபை, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் சபை. ஐரோப்பிய பொருளாதார சமூகம் ஆகியனவற்றின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொள்கின்றனர்.

இலங்கையின் இன்றைய சீரற்ற அரசியல் சூழ்நிலை காரணமாக, இலங்கைக்கு அதிக நிதி உதவி கிடைக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இது சம்பந்தமாகக் கிளப்பப்படும் கேள்விகளுக்கு திரு. ரொனி டீ மெல் தகுந்த விளக்கங்கள் அளிக்க வேண்டியிருக்கும் என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

"1984 — 85 ஆம் ஆண்டு அபிவிருத்தித் திட்டங்களுக்கான எல்லா உதவிகளும் எமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு" என திரு. ரொனி டீ மெல், பாரிஸ் விமான நிலையத்தில் வந்து இறங்கிய போது தெரிவித்தார். (க)

## 1978 சூறாவளி பாதிப்பு:

# மட்டக்களப்பில் 22 ஆலயங்களுக்கு நிதி

## இராசு நேரில் கையளித்தார்

வவுணதீவு, ஜூன் 20

1978 ஆம் ஆண்டு சூறாவளியால் சேதமுற்ற, மட்டக்களப்பு மாவட்ட வழிபாட்டு ஸ்தலங்களுக்கு புனர் நிர்மாண நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட தொகையை பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை, சம்பந்தப்பட்ட வழிபாட்டு நிலைய நிர்வாகிகளிடம், சென்ற திங்கட்கிழமை நேரில் கையளித்

(2ஆம் பக்கம் பார்க்க)

## சோமன்னை



அப்ப பின்னை, அடுத்த கப்பல் பாதுகாப்பாக வந்து சேர்கிற வரையிலை தேங்காய்ச் சம்பலைப் பற்றி நினைச்சும் பார்க்கக் கூடாது எண்டு சொல்லுறியளே?

பயங்கரவாதிகளை ஆதரிக்கும்

# தமிழ்நாட்டுக்கு ஊக்கம் அளிக்கவேண்டாம்என இந்திராவை கேட்பேன்

## கமிட்டிகள் கூட்டத்தில் ஜே. ஆர்.

— வாஷிங்டனிலிருந்து இக்பால் அத்தாஸ் —

வாஷிங்டன், ஜூன் 20

இலங்கையில் தனிநாடு கோரி போராட்டம் நடத்தும் பயங்கரவாதிகளுக்கு தமிழ் நாட்டின் தலைவர்களும் மக்களும் ஆதரவு வழங்குகிறார்கள். இந்த விவகாரத்தில் தமிழ் நாட்டு அரசுக்கு ஊக்கம் அளிக்கும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டாம் என்று இந்தியப் பிரதமர் திருமதி. இந்திராகாந்தியை வற்புறுத்துவேன்.

அமெரிக்க அரசியலில் இரு சக்தி வாய்ந்த, செல்வாக்கு மிக்க அமைப்புகளான செனட் வெளி உறவுகள் கமிட்டி, காங்கிரஸ் வெளி விவகார கமிட்டி ஆகியவற்றில் உரை நிகழ்த்துகையில் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் அழைப்பை ஏற்று, நாடு திரும்பும் வழியில் தாம் புதுடில்லி செல்ல இருப்பதாகவும் திரு. ஜெயவர்த்தன தமது உரையில் தெரிவித்தார்.

திரு. ஜெயவர்த்தனவின் ஒரு வாரகால அமெரிக்க விஜயத்தின் நான்காவது நாளான நேற்று, இந்த இரு கமிட்டிகளையும் சந்திப்பதே பிரதான நிகழ்ச்சியாக இருந்தது.

திரு. ஜெயவர்த்தன கலந்து கொண்ட வெளி உறவுகள் கமிட்டிக் கூட்டம் அந்தரங்கமாகவே நடைபெற்றது. செனட்டர் சார்ள்ஸ் பேர்சி கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

இதன் பின்னரே காங்கிரஸின் வெளிவிவகார கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தின் முதல் பகுதியில் பத்திரிகையாளர்கள் அநுமதிக்கப் பட்டனர்.

இந்த இரு கமிட்டிகளும் கடந்த வாரமும் அந்தரங்கமாகக் கூடி இலங்கை நிலைமை பற்றி ஆராய்ந்திருந்தன.

ராஜாங்க அமைச்சு அதிகாரிகளும், சி. ஐ. ஏ. எனப்படும் மத்திய உளவு அறியும் ஸ்தாபன அதிகாரிகளும் இந்த கமிட்டிகளை கூட்டி இருந்தார்கள்.

பத்திரிகையாளர்கள் அநுமதிக்கப்பட்ட காங்கிரஸின்

(2ஆம் பக்கம் பார்க்க)

பிரிவினை கோருவோருக்கு

# அமெரிக்காவில் உள்ள தமிழர்கள் பண உதவி

## றேகனுக்கு தெரிவித்தார் ஜே. ஆர்.

வாஷிங்டன், ஜூன் 20

இலங்கையை துண்டாடுவதற்காகப் போராடும் பயங்கரவாத இயக்கங்களுக்கு அமெரிக்காவில் உள்ள தமிழர்கள் நிதி உதவி வழங்குவதாக ஜனா

(2ஆம் பக்கம் பார்க்க)

## நோன்பு தொழுகை நேரம்

21 — 6 — 1984

| | | | |
|---|---|---|---|
| ஸஹர் முடிவு | — | காலை | 4.20 |
| ஸுபஹு | — | காலை | 4.35 |
| சூரிய உதயம் | — | காலை | 5.55 |
| ளுஹர் | — | பகல் | 12.20 |
| அஸர் | — | பிற்பகல் | 3.40 |
| மஃரிபு | — | மாலை | 6.28 |
| இஷா | — | இரவு | 7.48 |

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# தரம் குறைந்த தேயிலே ஏற்றுமதியாளர் மீது நடவடிக்கை

## அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 21 தரம் குறைந்த தேயிலேயை ஏற்றுமதி செய்பவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு பெருந் தோட்டத் தொழில் துறை அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜெயவிக்ரம எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

பெருமளவு அந்நியச் செலாவணியை தேயிலே விற்பனையின் மூலமே பெற்று வருகின்றோம். இச்சந்தர்ப்பத்தில் இலங்கை தேயிலேயை கொள்வனவு செய்வதில் வெளிநாடுகள் மிகவும் தீவிரம் காட்டி வருகின்றன.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலே தரம் குன்ருத வகையில் தயாரிக்கப்பட வேண்டியது அவசியம்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட தரமான தேயிலேயைக் கொள்வனவு செய்யவே தேயிலே இறக்குமதி நாடுகள் ஆர்வம் காட்டி வருகின்றன.

எமது தேயிலேக்கு உலகச் சந்தையிலும், உள்நாட்டில் நடைபெறும் ஏல விற்பனையிலும் பெரும் கிராக்கி ஏற்பட்டிருக்கிறது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒருசில தேயிலே உற்பத்தியாளர்களும், ஏற்றுமதியாளர்களும் தரம் குன்றிய தேயிலேயை பெட்டிகளில் அடைத்து விற்பனே செய்வதன் மூலம் பெரும் மோசடியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இதனுல் தேயிலே வர்த்தகம் பெரும் பாதிப்படையும். நாட்டின் மீது வெளிநாட்டவர் வைத்துள்ள நம்பிக்கையும் சிதறடிக்கப்பட்டுவிடும்.

இப்படித் தரம் குறைந்த தேயிலேயை ஏற்றுமதி செய்ய முற்படும் நிறுவனங்களின் அனுமதிப் பத்திரங்கள் ரத்துச் செய்யப்படும்.

இவ்வாறு திரு. ஜெயவிக்ரம எச்சரிக்கை விடுத்திருக்கிருர்.

தேயிலேக் கட்டுப்பாட்டுச் சபை இது விடயத்தில் தீவிர கண்காணிப்பு நடத்த வேண்டும் எனவும் அவர் உத்தரவு பிறப்பித்துள்ளார். (எ—வ)

# மலேயகத்தில் மாடுகளேகாப்புறுதி செய்யத் திட்டம்

கண்டி, ஜூன் 21 மலேயகத்தில் பசுமாடுகளேயும், இமுலேக்காக வளர்க்கப்படும் மாடுகளேயும் காப்புறுதி செய்வதற்கான திட்டம் ஒன்றினே கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு செயற்படுத்த இருக்கிறது.

கண்டி, மாத்தளே, நுவரெலியா போன்ற இடங்களில் வளர்க்கப்படும் மாடுகள் அனைத்தும் இத்திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்யப்படும்.

இதன் மூலம் அவற்றின் உரிமையாளருக்கு பெரும் அளவில் நன்மை கிட்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மலேயகத்தில் இவ்வாறு காப்புறுதி செய்வதற்காக சுமார் 10,000 மாடுகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இவை பத்து வருட காலத்துக்குக் காப்புறுதி செய்யப்படும். ஒரு மாட்டின் பெறுமதி 3,000 ரூபா எனவும் கணிக்கப்பட்டு காப்புறுதி செய்யப்படும்.

இத்திட்டம் மூலம் பாற்பண்ணேயாளர்களுக்கும், மாட்டுவண்டிச் சொந்தக்காரர்களுக்கும், மற்றும் இமுலேயின் பொருட்டு பயன்படுத்துபவர்களுக்கும் சம்பந்தப்பட்ட திணைக்களம் மூலம் பெரும் உதவிகளேப் பெற வாய்ப்பேற்படும்.

ஒரு மாட்டுக்காக ஆகக் குறைந்த தொகையாக காப்புறுதி செய்வதன் பொருட்டு 5 ரூபாவை மாத்திரமே செலுத்த வேண்டியிருக்கும் எனவும் அறிவிக்கப்படுகின்றது. (எ—வ)

"கம் உதாவ"

## சித்திரப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கு

### ஜனதிபதியின் பாரியாரிடமிருந்து பரிசு

கொழும்பு, ஜூன் 21 1984 "கம் உதாவ" கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் பாடசாலே மாணவர்களுக்கிடையில் கல்வி அமைச்சினுல் சித்திரப் போட்டியொன்று நடத்தப்பட்டது. போட்டியில் வெற்றியீட்டியோருக்கு ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் பாரியார் பரிசுகளே வழங்குவார்.

அனுராதபுரத்தில் நடைபெறும் கிராம எழுச்சித் திட்டக் கொண்டாட்டங்களின் இறுதி நாளான ஜூலே 3ஆம் திகதி ஜனதிபதியின், பாரியார் திருமதி ஜயவர்த்தன ரொக்கப் பரிசுகளேயும் சான்றிதழ்களேயும் மாணவர்களுக்கு வழங்குவார்.

இப்போட்டி, சகல கல்வி மாவட்டங்கள் அடிப்படையிலும் அதில் தெரிவானவர்களேக் கொண்டு அகில இலங்கை ரீதியாகவும் நடத்தப்பட்டன.

அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டிய மூன்று மாணவர்களுக்கும் முதலாவது பரிசாக 3000 ரூபா, இரண்டாவது பரிசாக 2000 ரூபா மூன்ருவது பரிசாக 1000 ரூபாவும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

முதலாவது பரிசு களுத்துறை மத்திய மகா வித்தியாலய மாணவன் செல்வன் பியல் சோமரத்னவுக்கும், இரண்டாம் பரிசு அலவ்வ மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் ஜே. கே. காமினி ஜயலத்திற்கும் —

மூன்ரும் பரிசு ரவி ஜயவர்தன என்ற ஹேவ்லொக்டவுன் இஸிபத்தன ... பின் மகா வித்தியாலய மாணவனுக்கும் வழங்கப்பட்டவிருக்கின்றன.

கல்வி மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட முதல் நான்கு மாணவர்களுக்குரிய சான்றிதழ்கள் அந்தந்த வட்டார கல்வி அதிகாரிகள் மூலம் சம்பந்தப்பட்ட பாடசாலேகளில் வைத்து நேரடியாக வழங்கப்படும். (எ—வ)



ஹவ்லொக் வீதியில் உள்ள சலுசல நிறுவனத்தில் மகளிர் ஆடைகள் விற்பனேப் பிரிவு ஒன்றை (விலாசித்தாநிவச) தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி திறந்து வைத்து அங்கு வைக்கப்பட்டிருந்த ஆடைகளேப் பார்வையிடுவதைப் படத்தில் காண்க. சலுசலாத் தலேவி திருமதி ஆர். ஐ. விமலசேன, திருமதி அத்துலத் முதலி ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர். (எ*ச)

# மகாவலி வலயங்களில் வீதியமைப்புக்கு ரூ. 28 கோடி

கொழும்பு, ஜூன் 21 துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், அபிவிருத்தியடைந்து வரும் ... ... ரும், தெஹஅக்கண்டியாவிலிருந்து அரகன்வில வரை 25 கிலோ மீட்டரும் அமைக்கத் திட்டமிடப்பட்டது.

இதற்கமைய இதுவரை நிர்... பட்டு விட்டன. இதன் மூலம் மகாவலி "சி", "பி" பிரிவு மக்களுக்கு போக்குவரத்து வசதிகள் கிடைக்கும் என அமைச்சு நம்பிக்கை தெரிவிக்கின்றது.

# தமிழ்நாட்டுக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவிவகார கமிட்டிக் கூட்டத்தில் திரு. ஜெயவர்த்தன பேசுகையில் பின்வருமாறு தெரிவித்தார்:—

இலங்கைப் பயங்கரவாதிகள் பாக்குநீரிணே வழியாக இந்தியாவுக்கு தப்பிச் செல்வதற்கு தமிழ் நாடு அரசாங்கம் அனுமதிக்கிறது.

பயங்கரவாதிகளுக்கு தமிழ் நாடு அரசாங்கம் அளிக்கும் ஆதரவே இலங்கை அரசாங்கம் எதிர்நோக்கி உள்ள மிகப் பெரும் சவால் ஆகும்.

சிறுபான்மையினர் பிரச்சினேயில் ஏற்படக்கூடிய எந்த ஒரு தீர்வும் பயங்கரவாதத்தை இல்லா தொழிப்பதுடனேயே ஏற்படவேண்டும். புறம்பான அரசியல் தீர்வையோ, சமூக தீர்வையோ அரசமைப்புதொடர்பான தீர்வையோ ஏற்படுத்த முடியாது.

பயங்கரவாதிகள் தனி நாட்டையே கோருகிருர்கள். சுயாட்சியையோ அல்லது இணைப்பு ஆட்சியையோ அல்லது வேறு எந்த சலுகைகளேயோ அவர்கள் ஏற்கத் தயார் இல்லே.

பயங்கரவாதிகள் தமிழ் நாட்டில் இருந்தே சகல அறிவிப்புகளேயும் வெளியிடுகிருர்கள். இலங்கையில் மட்டும் அன்றி தமிழ் நாட்டிலும் மார்க்சிய அரசு ஒன்றை ஏற்படுத்துவதே அவர்களின் நோக்கம்.

மேற்கண்டவாறு திரு. ஜெயவர்த்தன கூறினுர்.

அலன் தம்பதியர் கடத்தல் பற்றி அவர் தெரிவிக்கையில், சி. ஐ. ஏ. ஏஜென்டுகள் என்று அலன் தம்பதியர் குற்றஞ் சாட்டப்பட்டனர். ஆனுல் அவர்கள் அப்படி அல்ல. வடக்கில் தமிழ் மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கும் வேலேத் திட்டத்தில் அவர்கள் ஈடுபட்டு இருந்தார்கள் என்று கூறினுர்.

அதிர்ஷ்டவசமாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இந்த விவகாரத்தில் தலேயிட்டதால் அலன் தம்பதியர் விடுதலேயானுர்கள். நாம பணயப் பணம் எதுவும் செலுத்தவில்லே. உங்கள் நாட்டில் (அமெரிக்கா) பெரும் எண்ணிக்கையில் தமிழர்கள் வாழ்கிருர்கள். தாம் இலங்கையில் துன்புறுத்தப்படுவதாக அவர்கள் இங்கு வந்து கூறுகிருர்கள். அவர்களுக்கு நீங்கள் உதவுவீர்களானுல் பயங்கர வாதத்துக்கே உதவியவீர்களாவீர்கள் என்றும் திரு. ஜெயவர்த்தன சொன்னுர். (த)

# மட்டக்களப்பில்...

அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட போட்டியில் [illegible] வைத்து நேரடியாக வழங்கப்படும். (எ–ய)

# வெங்காயம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். பெரிய அலை ஒன்று மோதியதனால் கப்பல் மூழ்கியதாக அவரால் தெரிவிக்கப்பட்டது.

எனினும் கடல் கொந்தளிப்பு எதுவும் அப்பொழுது இருக்கவில்லை என்று கொழும்பு துறைமுக பைலட் நிலையம் அறிவிக்கிறது.

கப்பலில் வேலை செய்த 7 மாலுமிகளும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என, பொலீஸார் தெரிவித்தனர்.

கப்பல் மூழ்குவதை அவதானித்த மாஸ்டரும், மாலுமிகளும் உயிர்காப்பு படகு மூலம் தப்பினர். அவர்கள் நேற்று அதிகாலை வுனைவை ரயில் நிலைய பாலத்துக்கு அருகே வந்து கரை சேர்ந்தனர்.

இந்த கப்பல் நாக பட்டணத்தை விட்டு 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை புறப்பட்டது. கடந்த சனிக்கிழமை முதல் கப்பல் கடுமையான கால நிலைகளை எதிர்நோக்க வேண்டி இருந்தது என கப்பல் கப்டன் கூறினார்.

"தாம் ஆபத்தை எதிர் நோக்கி இருப்பதாக செவ்வாய் இரவு 7.30 மணி போல் துறைமுக மாலுமி நிலையத்தோடு தொடர்பு கொண்டு தெரிவித்ததாக" அவர் சொன்னார்.

இதுபற்றி கொழும்பு துறைமுக கப்டன் ஜி. ஓ. ஹென்ரிகஸுடன் தினபதி தொடர்பு கொண்ட போது, கப்பல் கப்டன் தம்மோடு தொடர்பு கொண்ட போதிலும் ஆபத்து பற்றி எதுவும் அவர் தெரிவிக்கவில்லை என்று கூறினார்.

செவ்வாய் இரவு பிரஸ்தாப கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்டதால் கூ. மொ. வி. லொறிகள் தயாராக துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. துறைமுக ஊழியர்களும் காத்திருந்தனர் என, வர்த்தக அமைச்சர் திரு. எம். எஸ். அமரசிறி கூறினார்.

மொரட்டுவை பொலீஸார் கப்பல் கூட்டுத்தாபனத்துக்குத் தகவல் கொடுத்த பின்னரே, இந்த விபத்து துறைமுகத்திற்கு தெரிய வந்தது என்றும் அவர் சொன்னார்.

கப்பல் மூழ்கியது தொடர்பாக உடனடி விசாரணை மேற்கொள்ளுமாறு அமைச்சர் பணிப்புரை விடுத்திருக்கிறார்.

இதே வேளை, வெங்காய தட்டுப்பாட்டை நீக்க மேலும் வெங்காய இறக்குமதிக்கு ஏற்பாடு செய்திருப்பதாக அமைச்சர் கூறினார். (த–ங)

## பிரதமர் பரிசு வழங்குவார்

கொழும்பு, ஜூன் 21
உள்ளூராட்சி அமைச்சின், நிர்மாண உற்பத்தி பயிற்சித் திட்டத்தின் கீழ் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற ஐந்து பேருக்கு, பிரதமர் திரு. ஆர். பிரேமதாச பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்குவார்.

ஆறாவது கிராம எழுச்சி நிறைவு தினத்தை முன்னிட்டு அனுராதபுரத்தில் நடைபெறவிருக்கும் 84 கிராம எழுச்சிக் கொண்டாட்டத்தின் இறுதி நாளன்று இப்பரிசுகள் வழங்கப்படும்.

வெற்றி பெற்றவர்களுக்கு இலங்கை கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனம் 4 ஆயிரம் ரூபா பெறுமதியான பரிசுகளையும் வழங்கவிருக்கிறது. ([illegible])

## திணைக்கள...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
புரிந்ததாக சந்தேகிக்கப்படும் சுகாதார திணைக்கள சிரேஷ்ட எழுதுவினைஞர் ஒருவரும், பீம்புர ஆஸ்பத்திரியின் ஒவசியர் ஒருவரும், பின்னர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர் ஒருவரின் வீட்டில் இருந்து, நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ள 50 பேரின் பெயர் பட்டியல் ஒன்றும் மீட்கப்பட்டது.

வேலை வங்கியின் ஊடாக தாதிகளாக தெரிவு செய்ய கடந்த வருடம் மார்ச் மாதத்தில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் ஜூலை மாதம் 4ஆம் திகதி நேர்முகப் பரீட்சை நடைபெற இருக்கிறது. ([illegible])

[illegible] கொழும்பு, ஜூன் 21
துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், அபிவிருத்தியடைந்து வரும் மகாவலி "சி", "பி" ஆகிய வலயங்களில் புதிதாக வீதிகளை அமைப்பதற்காக 28 கோடி ரூபா செலவிடப்படும்.

இலங்கை மகாவலி அபிவிருத்தி அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

160 கிலோ மீட்டர் நீளமான இந்த புதிய வீதிகளை அமைப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி மூலமும் உதவி பெறப்பட்டிருக்கிறது.

மஹியங்கனை, பதியதலாவை, பொலன்னறுவை, மட்டக்களப்பு ஆகிய பிரதான பாதைகளுடன் தொடர்புடையதாகவே மேற்படி வீதிகள் அமைக்கப்படும்.

மஹியங்கனையிலிருந்து மனம்பிட்டிய வரை 72 கிலோ மீட்டரும், அரலகன் விலவிலிருந்து மஹஓயாவரை 40 கிலோ மீட்டரும், [illegible] லிருந்து அரகன்வில வரை 25 கிலோ மீட்டரும் அமைக்கத் திட்டமிடப்பட்டது.

இதற்கமைய இதுவரை நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப் [illegible] மகாவலி "சி", "பி" பிரிவு மக்களுக்கு போக்குவரத்து வசதிகள் கிடைக்கும் என அமைச்சு நம்பிக்கை தெரிவிக்கின்றது. (எ–11)

# நிர்வாகத்தில்

## நேரடியாகப் பங்கு கொள்ளவே கிராமோதய சபைகள்

### அப்புஹாமி கருத்து

பண்டாரவளை, ஜூன் 20
அரசாங்கம் அமுல் நடத்தும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு பொதுமக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் அவசியமாகும். நாட்டின் நிர்வாகத்தில் பொதுமக்கள் நேரடியாகப் பங்கு கொள்ளவே கிராமோதய சபைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு கூறினார் பதுளை மாவட்ட அமைச்சரும், பண்டாரவளை எம். பியுமான திரு. ஆர். எம். அப்புஹாமி

பண்டாரவளை, கபில்லவெல கிராமோதய சபை ஏற்பாடு செய்திருந்த ஏழை மாணவர்களுக்கான புலமைப் பரிசில் சுவீப் சீட்டிழுப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கினிகம விளையாட்டு மைதானத்தில் சீட்டிழுப்பு நடைபெற்றது.

திரு. அப்புஹாமி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

பண்டாரவளை கபில்லவெல கிராமோதய சபை ஏழை மாணவர்களது கல்வி அபிவிருத்தியைக் கருதி ஏற்பாடு செய்துள்ள இந்தச் சீட்டிழுப்புத் திட்டம் பாராட்டத்தக்கது.

இந்தச் சீட்டிழுப்பில் பரிசு கிடைக்கா விட்டாலும் டிக்கட்டுக்காகக் கொடுத்த பணம் ஒரு நன்மையான காரியத்துக்காகக் கொடுக்கப்பட்டது. என அனைவரும் கருத வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். (எ–39)

சத்துருகொண்டான்

# படித்த மகளிர் குடியேற்றத்திட்டம் விஸ்தரிப்பு

வவுணதீவு, ஜூன் 20
பிரதேச அபிவிருத்தி அமைச்சின் மட்டக்களப்பு சத்துருகொண்டான் படித்த மகளிர் குடியேற்றத் திட்டம் தற்போது விஸ்தரிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

இவ்விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் ஏற்கனவே 50 யுவதிகள் குடியமர்த்தப்பட்டனர். தற்போது மேலும் 50 யுவதிகள் இக்காணிகளில் குடியமர்த்தப்படுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

கடந்த 4 வருடங்களுக்கு 50 யுவதிகளுக்கு, தலா 1½ ஏக்கர் துப்பரவு செய்யப்பட்ட காணிகள் வழங்கப்பட்டன.

இக்காணிகளில் சுற்றிவர எல்லை வேலி, தற்காலிக இருப்பிடவசதி கிணறு, வீட்டுத் தோட்ட செய்கை வசதி என்பன வழங்கப்பட்டிருக்கின்றன.

இந்த யுவதிகளில் சிலர் அதற்கு வழங்கப்பட்ட வீடுகளில் குடியிருக்கவும் இல்லை. வீட்டுத் தோட்ட செய்கையில் ஈடுபடவும் இல்லை.

இதனால் அவர்களுக்கு வழங்கப்பட்ட நிலம் கவனிப்பாரற்று காணப்பட்டது. இதனையடுத்தே அமைச்சு புதியவர்களை தெரிவு செய்து இத்திட்டத்தை விஸ்தரிக்க முடிவு செய்தது.

இவ்வாறு குடியேறிய யுவதிகளுக்கு மேலும் கால் நடைகள், தையல் மெசின்கள் போன்ற பல்வேறு வசதிகளை வழங்குவதற்கு அமைச்சர் திரு. செ. இராசதுரை நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்.

காணிகள் பெற்ற யுவதிகள் அங்கு குடியேறி திட்டத்தின்படி பயன்படுத்தத் தவறுவது கண்டுபிடிக்கப்பட்டால் அவற்றைப் பறிமுதல் செய்து வேறு யுவதிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. ([illegible])

# மட்டக்களப்பில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
தார்.

இத்திட்டத்தின் முதற் கட்டமாக 22 ஆலயங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த முதல் கட்ட நிவாரண உதவியை பெற்றுக் கொண்ட ஆலயங்கள் விவரம் வருமாறு.–

பாலமுருகன் ஆலயம் பெரிய ஊறணி, நாகதம்பிரான் ஆலயம் சத்துருகொண்டான், நாகதம்பிரான் ஆலயம் அமிர்தகழி தலா 2,600 ரூபா —

மாவடிப்பிள்ளையார் ஆலயம் கொக்குவில் — 5,200 ரூபா, கொம்பு சந்தி பிள்ளையார் ஆலயம் சத்துருகொண்டான் — 22,000 ரூபா, ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் திமிலைதீவு — 5,347 ரூபா —

காளி கோவில் கொக்குவில் — 3,600 ரூபா, பிள்ளையார் கோவில் பிள்ளையாரடி — 2,200 ரூபா, நாகதம்பிரான் கோவில் சின்ன ஊறணி — 2,400 ரூபா —

பிள்ளையார் கோவில் சின்ன ஊறணி — 11,600 ரூபா. கண்ணகி அம்மன் ஆலயம், சத்துருகொண்டான் — 13,600 ரூபா —

இந்து இளைஞர் மன்றம் — 29,600 ரூபா, நாகதம்பிரான் ஆலயம் கல்லடி — 4,600 ரூபா, சிவன் கோவில் திருப்பெருந்துறை — 10,000 ரூபா, நாகதம்பிரான் கோவில் கல்லடி — 3,200 ரூபா, ஸ்ரீ முருகன் ஆலயம் கல்லடி — 3,850 ரூபா, ஸ்ரீ விநாயகர் ஆலயம் சத்துருகொண்டான் — 2,000 ரூபா —

பெரிய தம்பிரான் ஆலயம் சத்துருகொண்டான் — 4,000 ரூபா, இராமர் ஆலயம் ஆரையம்பதி — 2,800 ரூபா, ஸ்ரீ திருப்பதி அம்மன் ஆலயம் புதுநகர் 9,980 ரூபா —

அன்னை வேளாங்கண்ணி தேவாலயம் — 11,600 ரூபா.

இதுவரை நிதி பெறாத ஏனைய ஆலயங்களுக்குரிய காசோலைகள் விரைவில் வழங்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார். (த–318)

## அமெரிக்கா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
திபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, அமெரிக்க ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறினார்.

நிதி உதவிகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன என்பது பற்றிய விவரங்கள் கிடைத்துள்ளன என்று இலங்கைத் தூதரகம் தெரிவித்தது.

இலங்கைப் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றின் போது, ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன மேற்படி தகவலை ஊர்ஜிதம் செய்தார்.

இது சம்பந்தமான அறிக்கை ஒன்றைத் தாம் கொண்டு வந்திருப்பதாகவும், சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் இந்தகைய செயல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்க நீதித் திணைக்களமும், அமெரிக்க உளவுப்பணியகமும் இதுபற்றி விசாரணைகளை மேற்கொள்ளக் கூடும் என்று இலங்கை அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சை

# முஸ்லிம் பாடசாலைகளுக்கு

## ஜூலை 15வரை விண்ணப்பிக்க அவகாசம்

கொழும்பு, ஜூன் 21
முஸ்லிம் பாடசாலைகள் ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஜூலை மாதம் 15 ஆம் திகதிக்கு முன் அனுப்ப அவகாசம் அளிக்கப்பட்டிருக்கிறது.

பரீட்சை ஆணையாளர் திரு. பி. காரியவசம் நேற்று இத்தகவலைத் [illegible] தெரிவித்தார்.

முஸ்லிம்களின் நோன்புப் பெருநாளை முன்னிட்டு சகல முஸ்லிம் பாடசாலைகளுக்கும் ஜூலை 9ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்பட்டிருக்கிறது.

எனவே இப்பாடசாலை மாணவர்களுக்கான விண்ணப்பங்களை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தபடி இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன் அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் முஸ்லிம் பாடசாலை [illegible] பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஜூலை மாதம் 15 ஆம் திகதிவரை அனுப்பி வைக்க அவகாசம் அளிக்கப்பட்டிருக்கிறது.

அதே நேரத்தில் ஏனைய பாடசாலைகள் முன்பு குறிப்பிட்டதன்படி இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என திரு. காரியவசம் தெரிவித்தார். ([illegible])

கந்தப்பு வாத்தியார்: — செல்வா




# தேயிலை விலையில்

## எதிர்பார்த்தது போல் வீழ்ச்சி இல்லை

### அதிகாரிகள் கருத்து

கொழும்பு, ஜூன் 21

இவ்வருட இறுதிக்குள் உள்ளூர் சந்தையில் தேயிலையின் விலை குறையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் தேயிலை விலையில் எவ்வித மாற்றமும் நிகழாது என இப்போது கருத்து வெளியிடப்பட்டிருக்கிறது. மேலும் ஊவா பிரதேசத்தில் நல்ல சுவாத்திய நிலை காணப்படுவதால், நல்ல ரக தேயிலை அங்கு உற்பத்தி செய்யப்படுகின்றது.

அப்பகுதி தேயிலைக்கே உள்ளூர் சந்தையில் நல்ல விலை கிடைக்கின்றது.

கடந்த நான்கு ஏல விற்பனைகளின் போது சுமார் 60 லட்சம் கிலோ கிராம் தேயிலைக்கு நல்ல விலை கிடைத்தது. (எ—ர)

# நடித்தால் மட்டும் போதாது பொறுப்பும் வரவேண்டும்

## டைரக்டராகும் ஜெயதேவி கருத்து

திரை வானில் நட்சத்திரமாக மின்னியதுடன், கதை வசனம், இசை, பாடல், டைரக்ஷன் என பல தொழில் நுட்பத் துறையிலும் புகழ்பெற்றவர், பி. பானுமதி. மறைந்த சாவித்திரி டைரக்ஷன், தயாரிப்பு துறையில் ஈடுபட்டார். அடுத்து விஜய நிர்மலா, லட்சுமி டைரக்ஷனுக்கு வந்தனர். இப்போதோ ஸ்ரீபிரியா, ஜெயதேவி வந்துள்ளனர்.

சில நாட்களுக்கு முன்பு திரைக்கு வந்துள்ள "நலம் நலமறிய ஆவல்" என்ற படத்தை டைரக்ட் செய்து தயாரித்தவர், நடிகை ஜெயதேவி.

நடனம், நாடகம், சினிமா நடிப்பு, தயாரிப்பு அடுத்து டைரக்ஷனில் காலூன்றி உள்ளவர் இவர். இவர் நடித்த படங்கள் 40 "மற்றவை நேரில்", "வா இந்தப் பக்கம்", "நன்றி மீண்டும் வருக", ஒரு புல்லாங்குழல் அடுப்பு ஊதுகிறது" ஆகியவையும் இவர் தயாரித்தவை.

கடந்த ஆண்டில் நடிகர் ஹரி பிரசாத் — ஜெயதேவி திருமணம் நடந்தது. அன்று முதல் நடிக்காமல் முழு மூச்சுடன் தயாரிப்பு, டைரக்ஷனில் இறங்கி இருக்கிறார்.

தனது படத் தயாரிப்பு, டைரக்ஷன் அனுபவம் பற்றி ஜெயதேவி கூறியதாவது:—

நடிகையாக மட்டும் இருந்தால் பொறுப்பை தலைமேல் சுமந்து சங்கடப்பட வேண்டியது இல்லை. கிடைத்த வேடத்தை நடித்து விட்டு வந்து விடலாம். படத் தயாரிப்பில் ஈடுபட்டாலோ படப்பிடிப்பு தொடங்கி அது திரையிடப்படும் வரை கொஞ்ச நேரம் கூட நிம்மதியாக இருக்க முடியாது.

என்று சினிமா நடிகை ஆனேனோ அன்று முதலே சினிமா துறை சம்பந்தப்பட்ட ஒவ்வொரு நுட்பத்தையும் தெரிந்து கொள்ளும் ஆர்வம் ஏற்பட்டது. படத் தயாரிப்பு என்பது சுலபமானது அல்ல.

படம் தயாரிக்க பணம் புரட்ட வேண்டும். படப்பிடிப்புக்கு முன்பே கதை, திரைக்கதை, இசை, படப்பிடிப்பு நடைபெற வேண்டிய இடங்கள் என கூர்ந்து கவனிக்க வேண்டும்.

நடிகர் — நடிகைகளிடம் "கால் ஷீட்டு" வாங்குவது இடை விடாமல் படத்தை தயாரித்து முடிக்க வேண்டியதற்கான ஏற்பாடுகள் படப்பிடிப்பு



# புளியங்குளத்தில் கால்நடை பண்ணை

## திட்ட அமுலாக்கல் அமைச்சின் மேலதிகச் செயலாளர் தகவல்

பேசாலை, ஜூன் 20

தேசிய கால்நடை வளர்ப்புச் சங்கத்துடன் கலந்தாலோசித்து புளியங்குளத்தில் கால்நடைப் பண்ணை ஒன்று ஆரம்பிக்கப்படும்.

திட்ட அமுலாக்கல் அமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி ஏ. எஸ். குணசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உயிலங்குளத்தில் அமைக்கப்பட்ட கால்நடை சந்தையைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:—

புளியங்குளம் அல்லது வெள்ளாங்குளத்தில் நல்ல இன மாட்டுப் பண்ணை அமைப்பதன் மூலம் மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கால்நடை வளர்ப்போர் பயனடைவார்கள்.

மன்னார் மாவட்டத்தில் நல்ல இன மாடுகள் இல்லை என தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலையை நீக்குவதற்கு விரைவில் பத்து அல்லது பதினைந்து நல்ல இன பசுக்களை கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பசுக்களை கொள் முதல் செய்யவென வங்கிகள் மூலம் 2 ஆயிரம் ரூபா கடனுதவி வழங்கும் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படவிருக்கிறது.

கால்நடை வளர்ப்போர் இத்திட்டத்தை நன்கு பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். (ல—251)

# மன்னார் திட்டமிடல் பிரிவு நிகழ்ச்சிகள்

# அரசாங்கத்தின் உதவிகளை

## தவறாது பயன்படுத்த வேண்டும்

### திட்டமிடல் உத்தியோகத்தர் கருத்து



பட கோட்டிப் பெண்ணாக ராதிகா தோன்றுவது "நிலவு சுடுவதில்லை" படத்துக்காக. (ல–10)

இடை விடாமல் படத்தை தயாரித்து முடிக்க வேண்டியதற்கான ஏற்பாடுகள் படப்பிடிப்பு முடிந்ததும் "டப்பிங்" "ரீரிக்கார்டிங்" படத்தை விற்பனை செய்வது திரையிட தியேட்டர்கள் பிரச்சினை இப்படியாக தொடர்ந்து பணிகள் இருந்து கொண்டே இருக்கும்.

போன்றவர்களே ஒரு விவசாயி பட அதிபர்கள் விவசாயி விவசாயம் பற்றிய அனைத்தையும் தெரிந்திருந்தாலே கதிர் அறுத்து களம் சேர்க்க முடியும்.

மழை வரட்சியினால் பாதகம் ஏற்படும். இதேபோன்ற நிலைதான் பட அதிபருக்கும், படப்பிடிப்பில் எதிர்பாராத சிக்கல்கள் பிரச்சினைகள் எழும். சமாளித்தே தீர வேணடும்.

## தினபதி சினிமா

என்னைப் பொறுத்த வரை முன்பே திட்டமிட்டுதான் செய்கிறேன். டைரக்ஷனுக்கு வந்த பின்பு மேலும் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

திரைக்கதை அமைப்பு மட்டும் தெளிவாக, குழப்பம் இல்லாதிருந்தால் தயாரிப்பு டைரக்ஷன் வேலைகளிலும் தடங்கல் ஏற்படாது தவிர்க்கலாம்.

டைரக்ஷன் – தயாரிப்பு இரண்டையும் ஏற்பது நெருப்பு ஆற்றில் நீந்தி கரை சேர்வது போன்றதே. ரசிகைகள், ரசிகர்கள் ஆதரவு அளித்தால் அந்த நெருப்பு ஆறும் குளிர்ந்த நீரோடை ஆகிவிடும்.

(ஜ–10)

## ராதா கர்ப்பவதியானார்

அவள் வாலைக்குமரி, வாளிப்பான உடல் அழகி. நாகரிக மோகத்தில் மூழ்கிய சிங்காரி. நீச்சல் குளத்தில் குளிப்பது என்றாலே இவளுக்கு ஒரு தனி ஆனந்தம்.

அப்படி குளிக்கும் போது வாலிபன் ஒருவன் மறைந்து நின்று அவள் அழகை பல கோணங்களில் "போட்டோ" படம் பிடித்தான். அவன் "போட்டோ" எடுத்த பிலிம் சுருளை தந்திரமாக கைப்பற்ற அவன் வீட்டுக்கே வந்தாள்.

அதுவும் எப்படி? வயிற்றில் தலையணையைக் கட்டிக் கொண்டு கர்ப்பவதி போல வந்தாள். அந்த வாலிபனின் தாயிடம் "அய்யய்யோ உங்கள் மகன் என்னைக் கெடுத்து வயிற்றில் பிள்ளையைக் கொடுத்து விட்டானே" என்று கலாட்டா செய்தாள்.

வாலிபனாக பிரபு, அழகியாக ராதா, பிரபுவின் தாயாக பி. ஆர். வரலட்சுமி நடிக்க, இந்த ரசமான காட்சி ராமகிருஷ்ணா சினி ஸ்டுடியோவின் "சரித்திர நாயகன்" என்ற படத்துக்காக ஐதராபாத்தில் படமானது.

சரித்திர நாயகனாக ஜமீன்தார் வேடத்தில் நடிக்கிறார், சிவாஜி கணேசன், ஜெய்சங்கர், எம். என். நம்பியார், சிலோன்



ராதா

மனோகர், சாரதா, ஜெயமாலினி நடிக்கிறார்கள்.

என். டி. ராமராவ் எழுதிய கதைக்கு ஏ. எல். நாராயணன் வசனம் எழுதுகிறார். இசை எம். எஸ். விசுவநாதன், ஒளிப்பதிவு மோகனகிருஷ்ணா, தயாரிப்பு ஹரிகிருஷ்ணா, டி. யோகானந் டைரக்ஷனில் வளரும் "சரித்திர நாயகன்" விரைவில் திரைக்கு வருகிறார்.

(ஜ–10)

## விஜயகாந்திடம் சசிகலா கிண்டல்

பெண்களை ஆண்கள் கிண்டல் செய்வது வாடிக்கை. ஆனால் ஆணைப் பெண் கிண்டல் செய்வது வேடிக்கை.

"கொட்டாம்பட்டி கருப்பாயி பட்டணத்துப் பொட்டிடுவேன் பாரு" என்று விஜயகாந்தை சசிகலா கிண்டல் செய்து பாடினார். இப்படி ஒரு காட்சி பி. எஸ். வி. பிக்சர்ஸ் "சபாஷ்" படத்தில் இடம் பெறுகிறது.

கே. தினகரன் வசனம் எழுத, சங்கர்–கணேஷ் இசை அமைக்க, என். கே. விசுவநாதன் ஒளிப்பதிவு செய்ய, ராம. நாராயணன் இயக்கும் இந்தப் படத்தில் ராதாரவி, எஸ். எஸ். சந்திரன், ஒய். ஜி. மகேந்திரன், செஞ்சி கிருஷ்ணன் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

(ஜ–10)

## திட்டமிடல் பிரிவு நிகழ்ச்சிகள்

தலைமன்னார், ஜூன் 20

மன்னார் திட்டமிடல் பிரிவினால் நடமாடும் சிகிச்சை முகாம், தாய்மாருக்கான கருத்தரங்குகள் என்பன நானாட்டான், வங்காலை ஆகிய இடங்களில் இடம் பெற்றன.

பிரிவு உதவி அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளில் மன்னார் திட்டமிடல் அதிகாரி திரு. ரி. இராசநாயகம், வட்டாரக் கல்வி அதிகாரி கே. எம், வஸீர் மாவட்ட வைத்திய அதிகாரி திரு. கே. ரி. சிவபாதம் ஆகியோர் விரிவுரை வழங்கினர்.

மேலும் பத்து முகாம்களை மாவட்டத்தின் பின் தங்கிய கிராமங்களில் அடுத்த மாதத்திற்குள் நடத்தி முடிக்க திட்டமிட்டிருப்பதாக திட்டமிடல் அதிகாரி ரி. இராசநாயகம் தெரிவித்தார்.

(ல–286)

## திட்டமிடல் உத்தியோகத்தர் கருத்து

சித்தன்கேணி, ஜூன் 20

அரசாங்க உதவிகள் யாழ் மாவட்டத்திற்கு மிக அருமையாகவே கிடைக்கின்றன. இந் நிலையில் நாம், எமக்குக் கிடைக்கும் சொற்ப உதவிகளை சிறிதும் தவற விடாது பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கிடைக்கும் உதவிகளைப் பயன்படுத்தாமல் விடுவது எமது மாவட்டத்திற்கு – இங்கு வாழும் மக்களுக்கும் நாம் செய்யும் துரோகமாகும்.

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜ மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற உணவு போஷாக்குத் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றிய யாழ். மாவட்ட திட்டமிடல் உத்தியோகத்தர் திரு. எஸ். சுவாமிநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

வலி மேற்குப் பிரிவு யுவதிகளும், கிராம சேவை அலுவலர்களும் விசேட சேவை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்ட இக்கருத்தரங்கில் தொடர்ந்து உரையாற்றிய திரு. எஸ். சுவாமிநாதன் கூறியதாவது,

திட்ட அமுலாக்கல் அமைச்சு தேசிய மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும், உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவு மட்டத்திலும் சுகாதாரக் குழுக்களை அமைத்திருக்கின்றது.

மக்களின் சுகாதார வசதிகளையும், குறைபாடுகளையும் அறிந்து அதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும், சமுதாயத்தை முன்னேற்றுவதற்காகவுமே அமைச்சு இக்குழுக்களை அமைத்திருக்கின்றது.

இந்த உண்மையை இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளும் யுவதிகளும், உத்தியோகத்தர்களும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

ஏனைய மாவட்டங்களை விட யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகமான கிராமங்களில் மலசலகூட வசதிகளும் சுகாதார வசதிகளும் இல்லாதிருப்பது வேதனைக்குரியது.

எமது மாவட்டத்தில் இக்குறைகளைப் போக்க சகல மக்களும் ஒருமுகமாக தொண்டாற்ற வேண்டும்.

உணவுப் போஷாக்கு சம்பந்தமான கருத்தரங்குகளில் சகல யுவதிகளும் கலந்து கொள்ள வேண்டும். இக் கருத்தரங்குகள் மூலம் பெற்ற அறிவை கிராம மக்களுக்கு நன்றாக உணர்த்த வேண்டும்.

மக்களுக்கு விசுவாசமாக சேவை செய்யக் கூடியவர்களே பொதுப் பணிகளில் ஈடுபட வேண்டும். இங்கு வருகை தந்திருக்கும் யுவதிகள் அனைவரும் மிகுந்த உற்சாகத்துடனும், கடமையுணர்வுடனும் செயற்படுவார்கள் என்றே நம்புகின்றேன்.

அரசாங்கம் இப்பயிற்சி நெறிக் கருத்தரங்கிற்கு ஒரு குறிப்பிட்ட தொகை பணத்தையே ஒதுக்கீடு செய்திருக்கிறது. இப் பணத்தை பூரணமாகப் பெற்று இதன் மூலம் அதிக பயனை அடைய வேண்டும்.

அரசாங்கத்தை எல்லாவற்றுக்கும் நம்பியிருக்காது எமக்குத் தேவையானவற்றை நாமே பெற்றுக் கொள்ள வேண்டும். இது போன்ற பயிற்சி நெறிக் கருத்தரங்குகள் மிகவும் துணையாக – பயனுள்ளதாக அமையுமென்றே கருதுகின்றேன்.

இவ்வாறு திரு. சுவாமிநாதன் கூறினார்.

(ல–283)

# ஆசிரிய நியமனம் தொகுதி ரீதியாக வழங்கப்பட வேண்டும்

## கல்வி அமைச்சரிடம் வேண்டுகோள்

கிண்ணியா, ஜூன் 20

போட்டிப் பரீட்சை முறையில் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படுவதால் மூதூர் போன்ற கிராமப் பகுதிகளுக்கு எவ்வித பயனுமில்லை. எனவே தராதரப்பத்திர மற்ற ஆசிரியர் நியமனங்களைத் தொகுதி ரீதியாக வழங்க வேண்டும்.

இவ்வாறு தேசிய கல்வி ஊழியர் சங்கத்தின் மூதூர் கிளை, கல்வி அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இக்கிளையின் செயலாளர் ஜனாப் ஏ. ஆர். எம். பரீத்தினால் கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள வேண்டுகோளில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

போட்டிப் பரீட்சை முறையில் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படுவதால் கிராமப் புறப் பாடசாலைகளின் கல்வித் தரம் மேலும் பாதிப்படைகிறது. காரணம் இம்முறையில் கிராம புறத்தவர்கள் நியமனம் பெறுவது மிகக் குறைவு. அது மட்டுமன்றி தெரிவு செய்யப்படும் பட்டணவாசிகள் நியமனம் பெற்று ஓரிரு மாதங்களில் பட்டணப் பகுதி பாடசாலைகளுக்குச் சென்று விடுகின்றனர். இதனால் கிராமப் புற பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக் குறை என்றும் வளர்ந்து கொண்டே போகின்றது.

எனவே கடந்த காலங்களைப் போன்று மீண்டும் ஆசிரியர் நியமனங்களை தொகுதி ரீதியாக வழங்க வேண்டும்.

இவ்வாறு அவ் வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மன்னார் மாவட்ட அமைச்சரும், மூதூர்த் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரு ஜனாப் எம். ஈ. எச். மஹ்ரூப்பிடமும் இதுபற்றி தெரிவிக்கப்பட்டது.

ஜனாப் மஹ்ரூப் இதுபற்றி அடுத்து நடைபெறவிருக்கும் அரசாங்க குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்க இருப்பதாகவும், தேவை ஏற்படின் நாடாளுமன்றத்தில் குரலெழுப்புவதாக வும் உறுதியளித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

(ல–151)

## பத்து லட்சம் வீடமைப்புத் திட்டம்

# திருகோணமலையில் தெரிவானோருக்கு நிதி கையளிப்பு

கொழும்பு, ஜூன் 21

பத்து லட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ், வீடுகளைக் கட்டுவதற்காக திருகோணமலை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு, 14 லட்சத்து 42 ஆயிரம் ரூபா இது வரை வழங்கப்பட்டிருக்கின்றது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மூலமே இந்த கடன் நிதி வழங்கப்பட்டிருக்கிறது.

1984 ஆம் ஆண்டுக்கான வீடமைப்புக் கடனுதவி தொடர்பாக 440 விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டன.

அவற்றில் 356 விண்ணப்பதாரர்களுக்கு கடனுதவிப் பணமும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர் திரு. விமலரத்ன இதனைத் தெரிவித்தார்.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ், திருகோணமலை மாவட்டத்தில் 356 வீடுகள் நிர்மாணிக்கப்படவிருக்கின்றன.

இதேவேளை, சேருவில தொகுதியில் 20 வீடுகளை உள்ளடக்கிய மகாவலி கிராமம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்திற்காக 9 லட்சத்து 30 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(ஏ–11)

தினபதி

தொலைபேசி
23832, 23884, 23864
தந்தி: "தினபதி" கொழும்பு
தபால் பெட்டி இல. 1613
5, குணசேன மாவத்தை,
கொழும்பு — 12

— 1984 ஜூன் 21 —
சுடர் 17 கதிர் 2707

## விவசாயமா, கைத்தொழிலா?

விவசாயத்தை மட்டும் நாம் நம்பியிருக்கக் கூடாது. புதிய தொழில் நுட்ப முறைகளைக் கையாண்டு கைத்தொழில் துறையில் முன்னேற்றம் காண வேண்டும்.

இப்படி வலியுறுத்தியிருக்கிறார் காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசாநாயக்கா.

குளியாப்பிட்டியில் பரிசளிப்பு வைபவம் ஒன்றில் அமைச்சர் காமினி திசாநாயக்கா நாட்டின் இன்றைய முக்கிய பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி அவற்றைத் தீர்ப்பதற்கான வழியையும் கூறினார்.

அமைச்சரின் கருத்துப்படி இன்று நாட்டை எதிர்நோக்கும் மிக முக்கிய பிரச்சினைகள் இரண்டு.

அவற்றில் ஒன்று வறுமை. மற்றது விஞ்ஞான தொழில் நுட்ப அறிவு இல்லாமை.

இந்தப் பிரச்சினைகளுக்கு நாம் விரைவாகத் தீர்வு காணவிட்டால், உலக வங்கியின் முன்னாள் தலைவர் ரொபர்ட் மக்னமாரா கூறியது போல நாமும் மற்றும் மூன்றாவது உலக நாடுகளும் மோசமான வறுமையில் உழல நேரும் என்று முன்னெச்சரிக்கை செய்தார் திரு. காமினி திசாநாயக்கா.

எங்களுடைய இன்றைய நிலை என்ன?

இந்த நாட்டு மக்களில் 50 சத விகிதத்துக்கு அதிகமானோர் உணவு முத்திரையை நம்பியே வாழ்கிறார்கள்.

தென் கிழக்கு ஆசியாவில் வங்காள தேசத்துக்கு அடுத்த படியாக இலங்கைதான்

# வாழ்க்கை என்பது ஒரு நீண்டபயணம்

## ஆண்டவன் திருவடி நிழலை அடைவது அதன் நோக்கம்

ஜபம், தியானம், ஜப சகித தியானம், தியான சகித ஜபம் ஆகியவற்றைக் கொண்டு வாழ்வில் ஒரு புது அத்தியாயத்தைத் தொடங்க வேண்டும்.

திரேதாயுகத்தில் ஆண்டவனது திருநாமம் சீதாராமன் என்றும் துவாபர யுகத்தில் இராதேசியாமா என்றும் கலியுகத்தில் சர்வநாமமாகவும் இருப்பதால், இக் கலியுகத்தில் ஆண்டவனது பெயர்களில் எது உகந்ததாக இருக்கிறதோ அதையே எடுத்துக் கொள்ளலாம்.

வாழ்க்கை என்பது ஆண்டவனது திருவடி நிழலை நோக்கிச் செய்யப்படும் ஒரு பயணமாகும். பிறக்கும் பொழுதே நீங்கள் முதல் படியின் மேல் காலை வைத்து விடுகிறீர்கள். அதன் பின் நாளுக்கொரு படியாக விறு விறு என்று ஏறிச் செல்ல வேண்டும்.

ஆகையால், ஒழுக்கத்துடனும் விழிப்புடனும் ஜாக்கிரதையாகவும் இருக்க வேண்டும். இன்னும் பாக்கியுள்ள படிகளை எத்தனை என்று எண்ணவும் வேண்டாம்; இத்தனை படிகள் ஏறி வந்து விட்டோமே என்று மகிழவும் வேண்டாம்.

ஒரு படி ஏறினாலும் நன்றாக ஏறினேமேயானால் அதுவே திருப்தி அளிக்கும் வெற்றியாகும். இது மேற்கொண்டு நிகழக் கூடியவற்றுக்குத் தகுந்த ஊக்கம் தரும். ஏறிய படியிலிருந்து வழுக்கி விடக் கூடாது. வீணாக்கப்பட்ட ஒவ்வொரு நாளும் தோல்வியேயாகும். அதற்காக வெட்கப்பட வேண்டும்.

வாழ்க்கைப் பாதையில் மெதுவாகச் சென்றாலும் விழிப்

**சாயி அமிர்தம்**

பாக இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொள்ளுங்கள்.

வேலைத் திட்டமொன்றை வகுத்துக் கொண்டு அதைத் தவறாது பின்பற்றுங்கள். மருத்துவர் ஒருவர் ஒரு குறிப்பிட்ட வியாதிக்கு மருந்தின் அளவைக் குறித்துத் தந்து அந்த அளவு குறைந்தால் பலனிருக்காது என்றும், அளவை மீறினால் தீமை விளைக்கின்றது என்றும் கூறுகின்றார். அது போலவே ஆத்ம பயிற்சிக்கும் ஓர் எல்லை உண்டு. அதிகமாகவும் அதைச் செய்யக் கூடாது, அல்லது கருத்தின்றி நினைத்த நேரத்தில் செய்தலும் கூடாது.

மருத்துவர்கள் மருந்தைத் தரும் போது ஒரு நாளைக்கு

**— பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா —**

எத்தனை முறை, எந்தெந்த நேரங்களில் சாப்பிட வேண்டும் என்று கணக்கிட்டுக் கூறுகின்றார்கள். அப்பொழுதுதான் மருந்து தொடர்ந்து வேலை செய்யும்; இல்லாவிடில் அது பயனற்றுப் போகும். இதே போல ஜபம், தியானம் இவற்றை அந்தந்த நேரங்களில் செய்து முடிக்க வேண்டும்.

கார்கள், ஆகாய விமானங்கள் போன்ற வாகனங்களில் மட்டுமே பயணம் செய்யும் பெரும் செல்வந்தர்கள், ஒரே இடத்தில் உட்கார்ந்து பழக்கமுள்ளவர்கள் போன்றவர்களை மருத்துவர்கள் தினந் தோறும் காலையில் நீண்ட தூரம் நடக்குமாறு கூறுகின்றார்கள்.

இவ்வாறு நடப்பது நல்ல உடற் பயிற்சி வலிவும் பெற உதவுகின்றது. உலக விவகாரங்களில் ஈடுபட்டு ஓயாது சிந்திப்பதன் காரணமாக ஏற்படும் மனத் தொல்லைகளுக்கும் மருந்து வேண்டும். நீ குருவிடம் சென்றால் தியானம், ஜபம் இரண்டையும் செய்யுமாறு அறிவுரை கூறுகின்றார்கள்.

உலகத்தோடு அதி வேகமாக ஓடாதே; அதற்குச் சிகிச்சையாகப் பேசாமல் உட்கார்ந்திருக்க வேண்டி வரும். உலகத்தின் வெறும் குழப்பத்திற்குள் சிக்கிக் கொள்ளாதே; அவ்வாறு நீ தவிக்க நேரிட்டால் அதற்குச் சிகிச்சை அமைதியாக ஓரிடம் இருந்து தியானம் செய்வதே.

உங்கள் ரயில் வண்டி பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருக்கிறது. வேறொன்று அருகில் உள்ள தண்டவாளத்தின் மேல் நகர்ந்து கொண்டிருக்கிறது.

எட்டிப் பார்த்தால் உங்கள் வண்டி நகர்ந்து கொண்டிருப்பது போலத் தோன்றும். இதைக் கவனித்திருப்பீர்கள். ஆனால் நீங்கள் அமர்ந்திருக்கும் பெட்டியின் மேலேயே கண்களை நிலை நிறுத்தினால் உண்மை புலப்படும்.

இதே போல, "வேறொன்றின்" மேல் கவனம் திருப்பப்பட்டு இருக்கும்வரை அறிவு, மாயையாகிய "வெளித் தோற்றத்தின்" அடிப்படையில் அமைகின்றது. உங்கள் மேலேயே கவனத்தைத் திருப்பிய உடனே, உலகம் இயங்கினாலும் நீங்கள் மட்டும் அப்படியே இருக்கிறீர்கள் என்ற உண்மையை அறிகிறீர்கள்.

ஆண்டவன் உலகத்தை அழிவினின்றும் காப்பாற்ற வந்துள்ளான் என்பதை உறுதியாக நம்புங்கள், எப்பொழுதும் அமைதியாக இருந்து உலகத்தில் உள்ளோரெல்லாம் மகிழ்ச்சியாகவும் சீரோடும் சிறப்புக்களோடும் வாழ வேண்டுமென்று பிரார்த்தனை செய்வதே உங்களுடைய கடமையாகும்.

உலகிலுள்ள மற்ற எல்லாம் சிதைந்தாலும் சரி, தான் மட்டும் மகிழ்ச்சியாக வாழ்ந்தாற் போதும் என்று பிரார்த்தனை செய்வார்கள். மனித குலம் வருந்திக் கொண்டிருக்கும் போது உங்களில் சிலர் மட்டும் மகிழ்ச்சியாயிருந்து விட முடியாது. மனித சமுதாயமாகிய செடியின் ஒரு பகுதியே நீங்கள், உங்கள் சீர் சிறப்புக்களைப் பிறருடன் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்; அவர்களது துன்பங்களைப் போக்கப் பாடுபட வேண்டும். இதுவே கடமை.

(ல)

## உற்சவம்

பண்டாரவளை, ஜூன் 20

கதிர்காம வருடாந்த உற்சவம் எதிர்வரும் ஜூலை 28ஆந் திகதி முதல் ஆகஸ்ட் 12ஆந் திகதிவரை நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகளை மொனராகலை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சி. அபே குணவர்த்தன மேற்கொண்டு வருகிறார்.

ஜூலை 28ஆந் திகதி கொடியேற்றத்துடன் உற்சவம் ஆரம்பமாகி ஆகஸ்ட் 12ஆந் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும். (ல—39)

## சங்கத்துக்கு காரியாலயம் இல்லாத குறை நீங்கி விட்டது

### திறப்பு விழாவில் உரை

ஓட்டமாவடி, ஜூன் 20

"கடந்த அறுபது ஆண்டுகளுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டு 2 ஆயிரத்துக்கும் மேலான அங்கத்தவர்களைக் கொண்டுள்ள இச் சங்கத்

இத் திறப்பு விழாவில் உரையாற்றும் போதே திரு. ருகல் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

## கிராமங்களில் அதிகமாக நோய் ஏற்படுவதன் காரணம்

### சுகாதார பரிசோதகர் விளக்கம்

வவுணதீவு, ஜூன் 20

கிராமவாசிகள் உணவுப் பொருட்களை சுகாதார முறைப்படி பேணிப் பாதுகாத்துக் கொள்ளத் தவறி விடுகிறார்கள். இதனால்தான் கிராமங்களில் அதிக நோய் ஏற்படுகின்றது.

இவ்வாறு ஏறுவூர் மீராக்கேணியில் நடைபெற்ற முதியோர் சத்துணவுத் திட்ட கருத்தரங்கில் உரையாற்றிய வலயிறவு பொது சுகாதார பரிசோதகர் ஜனாப் ஏ. எல். புகாரீதின்

ஜனாப் புகாரீதின் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், "கிராமப்புற விற்பனை நிலையங்களில் உணவுப் பொருட்கள் திறந்து வைத்த நிலையில் விற்பனை செய்யப்படுகின்றன. அதனால் அந்த உணவுப் பொருட்களில் புழுதி, நோய்க் கிருமிகள் என்பன சூழ்ந்து, நச்சுத் தன்மையை ஏற்படுத்தி விடுகின்றன.

இதனைப் புரிந்து கொள்ளாமல் கிராமவாசிகள் அவற்றை வாங்கி உட்கொண்டு நோயைத்



## செய்தித் திரட்டு

### பொங்கல் விழா

சித்தன்கேணி, ஜூன் 20

சித்தன்கேணி கலைநகர் கம்பம்புலோத ஆதி வைரவர் கோவில் வருடாந்தப் பொங்கல் விழா அண்மையில் நடைபெற்றது.

இவ்விழாவில் அன்னதானமும் இடம்பெற்றது.

(ல—283)

### பஸ் சேவை

சித்தன்கேணி, ஜூன் 20

கீரிமலைக்கும் முல்லைத்தீவுக்கும் இடையே புதிய பஸ் சேவை ஒன்றை முல்லைத்தீவு பஸ் டிப்போ அண்மையில் ஆரம்பித்தது.

இந்த பஸ் அதிகாலை 5.30 மணிக்கு கீரிமலை பஸ் நிலையத்திலிருந்து புறப்படுகிறது.

(ல—283)

★

வெலிகாமம், ஜூன் 20

முல்கிரிகல தேர்தல் தொகுதியைச் சேர்ந்த கிரம வல்தெஹிலங்கவிலிருந்து ஹந்துகல்லவரை போக்குவரத்து சபையால் புதிய பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

முல்கிரிகல எம். பி. திரு. ஆனந்த குலரத்ன இதனை ஆரம்பித்து வைத்தார். (ல—331)

### பள்ளிவாசல்

கெக்கிறாவை, ஜூன் 20

மணலேக்கர் கிராம மக்களினால் சிரமதானம் மூலம் கட்டி முடிக்கப்பட்ட பள்ளிவாசல் புனித நோன்பு மாத சமய நடவடிக்கைகளை முன்னிட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

அதன் திறப்பு விழாவில் மௌலவி எஸ். ஏ. ஸமத் (பாகவி) கலந்து கொண்டார்.

ஐங்காலத் தொழுகை, தராவீஹ் தொழுகை என்பன அங்கு நடத்தப்படுகின்றன.

(ல—158)

### பயிற்சி வகுப்பு

பேசாலை, ஜூன் 20

மன்னார், வவுனியா மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கான சுய பாதுகாப்பு பயிற்சி வகுப்பு இம்மாத இறுதியில் மன்னாரில் நடைபெறும்.

தென் கிழக்கு ஆசியாவில் வங்காள தேசத்துக்கு அடுத்த படியாக இலங்கைதான் மிகுந்த வறுமைப்பட்ட நாடு.

இங்குள்ளவர்களின் சராசரி வருமானம் 200 ரூபா. இன்று இந்த 200 ரூபாவை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும் என்று கேள்வி எழுப்பினார் திரு. காமினி திசாநாயக்கா.

தேங்காய் விலை உயர்ந்து விட்டதே என்று எல்லோரும் அழுகிறோம்.

ஒரு விஷயத்தை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அரசியல் சுதந்திரம் அடைந்த பின்னர் எத்தனை தென்னங் கன்றுகளை நட்டோம்? பல்வேறு காரணங்களுக்காகத் தென்னைகளைத் தறித்து வீழ்த்திக் கொண்டே இருக்கிறோம். ஆயின் தேங்காய் விலை ஏறாமல் இறங்குவா செய்யும்?

தென்னங் கன்றுகளை நட்டு விஞ்ஞான தொழில் நுட்ப முறைகளைக் கையாண்டு நாம் தெங்குச் செய்கையை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றார் அமைச்சர் காமினி திசாநாயக்கா.

இலங்கை ஒரு விவசாய நாடுதான். அதைக் கூறுவதில் எமக்கெல்லாம் பெருமை. அதேவேளையில் அரிசியை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம்.

நாம் இனிமேலும் விவசாயத்தை நம்பியிருக்க முடியாது.

மகாவலி அபிவிருத்தித் திட்டம் பூர்த்தி அடைவதோடு எங்கள் நாட்டு விவசாய அபிவிருத்தியும் நின்று விடும். அதற்கு மேல் வேளாண்மைச் செய்கையை விஸ்தரிக்க முடியாது. ஆகையால் நாம் வேறு அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி ஆலோசிக்க வேண்டும்.

விஞ்ஞான தொழில் நுட்ப முறைகளைக் கையாண்டு கைத்தொழில் துறையில் நாம் முன்னேற முயற்சி செய்ய வேண்டும்.

இந்த முயற்சியில் பிற நாட்டவர்களையும் பங்கு கொள்ள வைத்தால் பெரும் பயன் அடைவோம். அரசாங்கம் இத்தகைய சிந்தனையுடனேயே செயற்பட்டு வருகிறது என்று கூறினார் திரு. காமினி திசாநாயக்கா.

அவர் வெளியிட்டிருக்கும் கருத்துகள் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டியவை ஆகும்.

---

பமாகி ஆகஸ்ட் 12ஆந் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும். (ல—39)

## கூட்டம்

கொழும்பு, ஜூன் 21

திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையத்தின் ஆலோசனைச் சபைக் கூட்டம் அண்மையில் ஜனாப் றிஸ்வி ரசாக் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் ஜனாப் எம். பத்ரி ஹாசிம் உரையாற்றினார்.

இக் கூட்டத்தில் அல்ஹாஜ் எம். அஷ்ரப் ஹுசைன், ஜனாப் ஏ. எம். பரீட், ஜனாப் ஏ. டபிள்யூ. எம். லாபிர், ஜனாப் எம். டி. பீ. அலுஹார்தீன் ஆகியோரும் உரையாற்றினர்கள். (எ—11)

---

களுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டு 2 ஆயிரத்துக்கும் மேலான அங்கத்தவர்களைக் கொண்டுள்ள இச் சங்கத்திற்கென ஒரு காரியாலயம் இல்லாத குறை நீங்கி விட்டது.

இவ்வாறு கூறினார் மட்டக்களப்பு கத்தோலிக்க பறங்கியர் சங்கத்தின் தலைவரும், கல்குடா வளர்ந்தோர் கல்வி அதிகாரியுமான திரு. எப். ஆர். ருகல்.

மட்டக்களப்பு கத்தோலிக்க பறங்கியர் சங்கத்தின் சேமநலக் கட்டடம் அண்மையில் திருமலை, மட்டுநகர் ஆயர் வண. ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அடிகளாரினால் ஆசிர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

பொதுமக்களும், சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்ட... திரு. ருகல் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

இந்த சேமநலக் கட்டடத்தின் தேவையை உணர்ந்த முன்னாள் தலைவர் காலஞ்சென்ற ரெருனல்ட் ரெசாயிரோ இதற்கென நிலம் பெற்று அடிக்கல் நடுவதற்கான ஏற்பாடும் செய்திருந்தார்.

ஆனால் பல தவிர்க்க முடியாத காரணங்களினால் இக் கட்டடம் பூர்த்தி அடையாத நிலையில் இருந்தது.

புதிய நிர்வாகம் பொறுப்பேற்ற பின் ஒல்லாந்து நாட்டைச் சேர்ந்த "செபமோ ஸ்தாபன"த்தின் உதவியோடு கட்டடத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

இக் கட்டடம் பல்வேறு நோக்கங்களுக்கும் பயன்படும்.

சமூகத்தினரின் சங்கக் கூட்டங்களை நடத்தவும், வரவேற்பு மண்டபமாகவும், இளைஞர்கட்கு தொழில்நுட்ப வேலைகளைக் கற்க ஓர் பயிற்சிக் கூடமாகவும், எமது பட்டணத்திற்கு வரும் உத்தியோகத்தர்களுக்கு தங்குமிட வசதி அளிக்கவும் இக் கட்டடம் பயன்படும்.

இவ்வாறு அவர் கூறினார். (ல— 236)

---

யோர் சத்துணவுத் திட்ட கருத்தரங்கில் உரையாற்றிய வலையிறவு பொது சுகாதார பரிசோதகர் ஜனாப் ஏ. எல். புகார்தீன் விளக்கினார்.

கல்வி இலாகாவும், திட்டமிடல் பிரிவும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த இக் கருத்தரங்கிற்கு முதியோர் கல்வி அதிகாரி ஜனாப் ஏ. எம். உதுமான் லெப்பை தலைமை வகித்தார்.

...ஏற்படுத்தி விடுகின்றன.

இதனைப் புரிந்து கொள்ளாமல் கிராமவாசிகள் அவற்றை வாங்கி உட்கொண்டு நோயைத் தேடிக் கொள்கிறார்கள்.

கிராமப்புற மக்கள் சுகாதார முறைகளைப் பின்பற்ற வேண்டியது மிக அவசியமாகும்."

இவ்வாறு அவர் கூறினார். (ல— 318)

---

## கடன் சபை அங்கத்துவ இலக்கம் இல்லாமை கண்டுபிடிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் பணிபுரியும் கல்வித் திணைக்கள நிரந்தர ஊழியர்களில் பெரும் பாலானோருக்கு கடன் வழங்கும் சபை அங்கத்துவ இலக்கம் இல்லை என்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை பிற மாவட்டங்களில் இருந்து இங்கு வந்து பணி புரியும் பல ஆசிரியர்களுக்கும் ஊழியர்களுக்கும் இரண்டு கடன் சபை அங்கத்துவ இலக்கங்கள் இருக்கின்றன. இதனை திருகோணமலை மாவட்ட கல்வித் திணைக்கள கடன் வழங்கும் சபைச் செயலாளர் திரு. ஓ. குலேந்திரன் கண்டு பிடித்தார்.

அதனைத் தொடர்ந்து கடன் வழங்கும் சபை தொடர்பான சுற்று நிருபம் ஒன்றினை அவர் இம்மாவட்டத்திலுள்ள சகல பாடசாலை அதிபர்களுக்கும் கடன் வழங்கு சபை அங்கத்தவர்களுக்கும், அனுப்பி வைத்திருக்கிறார். (ல—186)

---

...இளைஞர், யுவதிகளுக்கான சுய பாதுகாப்பு பயிற்சி வகுப்பு இம்மாத இறுதியில் மன்னாரில் நடைபெறும்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மன்னார் மாவட்ட காரியாலயத்தினால் நடத்தப்படும் இவ்வகுப்பு 4 நாட்களுக்கு நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகளை தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மன்னார் மாவட்ட அலுவலர் ஜனாப் ஏ. சி. ஏ. கபூர் மேற்கொண்டு வருகிறார். (ல—251)

## சித்திரக் கூடம்

கிளிநொச்சி, ஜூன் 20

கிளிநொச்சி செந்திரேசா மகளிர் வித்தியாலயத்தில் சித்திரக் கூடம் ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா அண்மையில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் செல்வி இராசமணி சின்னத்தம்பி இதற்காக முயற்சி எடுத்திருந்தார்.

இவ்வித்தியாலயத்தின் நலன் புரிச் சங்கம் இக்கட்டடத்தை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது. (ல—244)

## கைது

பேசாலை, ஜூன் 20

தலைமன்னார் பொலீஸார் நடத்திய திடீர் சோதனையில், பல கசிப்பு விற்பனையாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

வாகனங்களைச் சோதனையிட்டு இரண்டு போத்தல் சாராயத்திற்கு மேல் கொண்டு சென்ற பலரும் கைது செய்யப்பட்டனர். (ல—251)

---

## அதிபர் பதவி உயர்வு விண்ணப்பம் கோரப்படும்

கொழும்பு, ஜூன் 21

அரசாங்க பாடசாலை அதிபர்களின் பதவி உயர்வுக்கான விண்ணப்பங்கள் ஜூலை மாத ஆரம்பத்தில் கோரப்படும்.

அதேவேளை 3 ஆம், 4 ஆம் வகுப்பு அதிபர் பதவிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

இதுவரை 3 ஆம் வகுப்பில் 16 பதவிகளும், 4 ஆம் வகுப்பில் 170 பதவிகளுமே இருந்தன. இப்போது அவை முறையே 50, 300 பதவிகளாக அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

மேலதிகமான இப் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காகவே தகுதியுடைய பாடசாலை அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட இருப்பதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இப் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஜூலை மாதம் முதல் வாரம் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் என கல்விச் சேவைகள் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர் தினபதிக்குத் தெரிவித்தார். (ப—ய)

---

## தலைமன்னாரில் பனம், தும்பு தொழிற்சாலை

தலைமன்னார், ஜூன் 20

பனம் பொருள் அபிவிருத்திச் சபையினால் தலைமன்னார் கிராமோதய சபையின் அனுசரணையுடன் தலைமன்னாரில் பனம் தும்புத் தொழிற்சாலைக்கான அடிக்கல் அண்மையில் நடப்பட்டது.

மன்னார் உதவி அரசாங்க அதிபர் திரு. பாஸ்கரதாஸ் அடிக்கல்லை நட்டார்.

அதேதினம் தலைமன்னார் தமிழ் கலவன் பாடசாலையில் பனம் பொருள் பொருட்காட்சியொன்றும் இடம் பெற்றது. இதனை பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. க. பரமேஸ்வரன் திறந்து வைத்தார்.

இப்பொருட் காட்சியில் பனம் பொருட்களால் செய்யப்பட்ட பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

பொருட்கள் விற்பனையை தலைமன்னார் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. கே. அரசரத்தினம் ஆரம்பித்து வைத்தார்.

மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திரு. மக்பூல், மன்னார் உதவி அரசாங்க அதிபர் திரு பாஸ்கரதாஸ், பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. க. பரமேஸ்வரன், திட்டமிடல் உதவி பணிப்பாளர் திரு. ரங்கராஜா உட்பட மற்றும் பலர் கருத்தரங்கில் உரையாற்றினார்கள். ([illegible])

---

## புனித ரமழான் சிந்தனைகள்

வேகமாக சென்று கொண்டிருக்கும் ரமழானின் கடைசிப் பாகத்தின் நிழலில் நின்று கொண்டிருக்கிறோம். உலகம் போற்றும் உயர் மறையாம் திருக்குர்ஆன் புனித ரமழான் மாதத்தில் அருளப்பட்டதை அனைவரும் அறிவர்.

இதனால் ரமழான் மாதத்துக்கு "ஸஹ்றுல் குர்ஆன்" — குர்ஆனுடைய மாதம் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. "ரமழான் மாதம் எத்தகைய மகத்துவமிக்க மாதமென்றால் அதில் தான் குர்ஆன் என்னும் அற்புத வேதம் அருளப்பட்டது. அது மனிதர்களுக்கு நேர்வழியாகவும் நன்மை எது? தீமை எது? உண்மை, பொய், நீதி, அநீதி எதுவெனப் பிரித்தறிந்து (எல்லாத் துறையிலும்) நேரான வழியைத் தெளிவாக்கக் கூடியதாக இருக்கிறது" என அல்லாஹுத்தஆலா தன்து மாமறையாம் திருக்குர்ஆனிலேயே அதைப் பற்றி தெளிவுபடுத்துகிறான்.

எனவே, அல்குர்ஆன் அருளப்பட்ட இந்த மாதத்தில் நாம் அதனை அதிகமாக ஓத வேண்டும், ஏனெனில் நாம் நோற்ற நோன்பு, நாம் ஓதிய திருக்குர்ஆன் ஆகிய இவை இரண்டும் மறுமை நாளில் எமக்காக அல்லாஹ்விடம் மன்றாடக் கூடியவையே.

இது பற்றி உலகத் தூதர் உத்தம நபி (ஸல்) அவர்கள் கூறும்போது மறுமை நாளில் நோன்பாளிக்காக நோன்பும், திருக்குர்ஆனும் பரிந்து பேசும்.

"யா அல்லாஹ்! பகல் நேரத்தில் உண்ணாமலும், பருகாமலும் அவனை நான் தடுத்து வைத்திருந்தேன். எனவே அவனுக்காக எனது சிபார்சை ஏற்றுக் கொள்வாயாக!" என்று நோன்பு மறுமை நாளில் அல்லாஹ்விடம் மன்றாடும்.

அவ்வாறே, "என்னை ஓதி உணர்வதற்காக இராவெல்லாம் தூங்காமல் நான் அவனைத் தடுத்து வைத்தேன். எனவே அவனுக்காக எனது பரிந்து பேசுதலை அங்கீகரிப்பாயாக!" என்று அல்குர்ஆன் அல்லாஹ்வை மன்றாடும். எனவே இவற்றின் சிபார்சுகள் அல்லாஹ்வினால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன" என்றார்கள். ([illegible])

மறுமை நாளில் எமக்காக வாதாடக் கூடிய, நரக நெருப்பை விட்டும் எம்மைப் பாதுகாக்கக் கூடிய நல்லமல்களை நாம் விட்டு விடக் கூடாது.

"குர்ஆன் உடையவர்களே! குர்ஆனை தலையணையாக்கிக் கொள்ளாதீர்கள். இரவு, பகல் அதனை முறையாக ஓதிக் கொள்ளுங்கள். அதனைப் பரப்புங்கள்! அதனை இனிய குரலால் ஓதுங்கள். நீங்கள் வெற்றி பெறுவீர்கள். அதன் பலனை இம்மையில் தேடாதீர்கள்! நிச்சயமாக அதற்குரிய பெரும் பலன் மறுமையில் இருக்கிறது" என்று அருமை நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள்.

'ஆம்! அற்புத வேதமான அறிவுக் களஞ்சியமான அல்குர்ஆன் அருளப்பட்ட மாதமாம் ரமழானில் நாம் நோன்பை நோற்பதுடன் நின்று விடாது அருள்மறையாம் திருக்குர்ஆனையும் அனுதினமும் ஓதி, அதன் அனுக்கிரகத்தை நுகர்ந்த நல்லடியார்களாகி அல்லாஹுவின் நிலைத்த நற்பேற்றை பெறுவோமாக! ஆமீன்! ஆமீன்!! யாரப்பல் ஆலமீன்!!

([illegible])

---

## இணுவிலில் திருவுருவத் திறப்பு விழா

கொழும்பு, ஜூன் 21

இணுவில் கந்தசுவாமி கோவிலின் பிரதம குரு, அமரர் சிவஸ்ரீ இராமநாதக் குருக்களின் ஓராண்டு நினைவு தினத்தையொட்டி அவரது திருவுருவப் படத் திறப்பு விழா நாளை 22 ஆம் திகதி காலை 11 மணியளவில் இணுவிலில் நடைபெறும்.

கோப்பாய் சிவஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள் மேற்படி திருஉருவப் படத்தை திரைநீக்கம் செய்து வைப்பார்.

அதையடுத்து இணுவில் தர்மசாஸ்த்தா குருகுல மாணவர்கள் திருவுருவத்திற்கு மலர் அஞ்சலி செய்வார்கள்.

இதனைத் தொடர்ந்து அந்தணப் பெரியார்களினதும், சைவப் பெரியார்களினதும் சிறப்புரைகள் இடம்பெறும். (ல— ர)

# தலைமறைவாகி இருக்கும் 100 சீக்கிய தீவிரவாதிகள்

## பாதுகாப்புக்கு இன்னும் பெரும் பயமுறுத்தல் என கருத்து

## இந்திய இராணுவம் தேடுதல்

புதுடில்லி, ஜூன் 20

**பஞ்சாப் மாநிலத்தின் கிராமங்களில் சீக்கிய தீவிரவாதிகளைத் தேடி இந்திய இராணுவத்தினர் நேற்று தொடர்ந்தும் தேடுதல்களை நடத்தினர். தலைமறைவாகியுள்ளதாகக் கருதப்படும் 100 அதி தீவிரவாதிகளைத் தேடியே இந்த வேட்டை நடைபெறுகிறது. சந்தேகத்தின் பேரில் 50 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

சாதாரண நிலைமைக்குத் திரும்பி வரும் பஞ்சாப்பின் அமைதிக்கு இவர்களால் பயமுறுத்தல்கள் ஏற்படுமென கருதப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் தடை செய்யப்பட்ட அனைத்திந்திய சீக்கிய மாணவர்கள் சம்மேளனத்தின் பிரசாரக செயலாளராவார். இந்த இயக்கம் கெரில்லா பயிற்சி முகாம்களை நடத்தியதென்ற காரணத்தால் அரசாங்கம் ஏற்கனவே தடை செய்துள்ளது.

இதேவேளை பிரதம மந்திரி இந்திரா காந்தி, அவரது மகன் ராஜீவ், முக்கிய அரசாங்க அதிகாரிகள், இந்திரா காந்தியின் காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் ஆகியோருக்கு மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொற் கோயில் முற்றுகை நடைபெற்றதன் பின்னர் 3,500 சீக்கிய தீவிரவாதிகள் அல்லது ஆதரவாளர்கள் என்ற பெயரில் சந்தேகத்தின் பேரில் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை பஞ்சாபிலிருந்து ராஜஸ்தான் மாநிலத்துக்கு நீரைக் கொண்டு செல்லும் விவசாயக் கால்வாய் வெட்டி விடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இது தீவிரவாதிகளின் செயலாக இருக்குமெனக் கூறப்படுகிறது.

இது போன்று இரு வாரங்களுக்கு முன்னர் பஞ்சாப்பிலிருந்து ராஜஸ்தானுக்கு நீரைக் கொண்டு செல்லும் கால்வாய் ஒன்று பாழ்படுத்தப்பட்டது.

பஞ்சாப்பின் ஆறுகளில் இருந்து நீரை மற்றைய மாநிலங்களுக்குக் கொடுக்கக் கூடாதென தமது மத அரசியல் உரிமைப் போராட்டங்களின் போது சீக்கிய தீவிரவாதிகள் கூறிவந்துள்ளனர்.

பஞ்சாப் நிலைமை பற்றி பிரதமர் இந்திரா காந்தி நேற்று தமது மந்திரி சபையுடன் கலந்துரையாடினர். தேடுதல் நடவடிக்கைகள் திருப்திகரமாக இருப்பதாக அவர் கூறினர்.

கடந்த இரு வாரங்களாகப் பல பஞ்சாப் நகரங்களில் மாலை முதல் காலை வரை அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் தற்போது சில இடங்களில் இரவு முதல் காலை வரை குறைக்கப்பட்டுள்ளன.

இதே வேளை பிரிட்டிஷ் வானொலிக்காக அளித்த பேட்டி ஒன்றில், சீக்கிய தீவிரவாதிகளுக்கெதிராக பொற் கோயில் முற்றுகையை இதற்கு முன்னரே நடத்தியிருந்தால் பாரதூரமான பல சம்பவங்களைத் தடுத்திருக்கலாம் என்பதை தாம் ஒப்புக் கொள்வதாகக் கூறியுள்ளார்.

(ந)



இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது 1944 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6 ஆம் திகதி நேச நாட்டுப் படைகள் பிரான்சின் நோர்மண்டி கடற்கரையில் இறங்கி ஜெர்மன் படையுடன் நடத்திய யுத்தம் உலக மகா யுத்தத்தில் முக்கிய திருப்புமுனையாக அமைந்தது.

அந்தத் தினத்தின் 40 ஆவது ஞாபகார்த்த நிகழ்ச்சிகள் அண்மையில் பிரிட்டனில் நடைபெற்றன.

அந்த நிகழ்ச்சிகளின் போது மேற்படி யுத்தத்தில் ஈடுபட்டு உயிர்தப்பிய வீரர்களுடன் பிரிட்டிஷ் எலிஸபெத் மகாராணி பேசிக் கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

(ந)

## ஜப்பானிய பொருட்களுக்கு ஈரானிய எண்ணெய்

டோக்கியோ, ஜூன் 20

ஜப்பானியப் பொருட்களை ஈரானுக்கு விற்பனை செய்ய வேண்டுமானுல் ஈரானிலிருந்து மசகு எண்ணெயக் கொள்வனவு செய்ய வேண்டும்.

இவ்வாறு ஜப்பானிய வர்த்தகர்களுக்கு ஈரான் கூறியுள்ளது.

(ந)

## கப்பல், விமான நிலையை சரியாக காட்டும் கருவி

டோக்கியோ, ஜூன் 20

வேகமாகச் செல்லும் விமானம் அல்லது கப்பல் நிலை பெற்றுள்ள இடத்தை மிகவும் துல்லியமாகக் கணிக்கக் கூடிய கருவி ஒன்றை ஜப்பானில் சோனி நிறுவனம் உருவாக்கியுள்ளது.

தற்போது அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களம் உருவாக்கியுள்ள செய்மதி விண்கலங்களில் இருந்து பெறப்படும் சமிக்ஞைகளைப் பயன்படுத்தி இந்தக் கருவி கப்பல் அல்லது விமானத்தின் நிலையை சரியாகக் கணித்து விடுகிறது.

இந்தக் கருவி சமாதான உபயோகங்களுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படும் என சோனி நிறுவனம் கூறியது.

(ந)

## பாகிஸ்தான் தேர்தல்கள் அடுத்த மார்ச் நடக்கும்

### ஜனுதிபதி ஷியா அறிவிப்பு

ராவல்பிண்டி, ஜூன் 20

அடுத்த மார்ச் மாதத்துக்குள் பாகிஸ்தானில் தேசிய தேர்தல்களை நடத்தித் தெரிவாகும் அரசாங்கத்திடம் தமது பொறுப்புகளைக் கொடுத்து விடப் போவதாக இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் மொஹம்மட் ஷியா உல் ஹக் நேற்று அறிவித்தார்.

நாட்டில் தேர்தலை நடத்துவதற்காக தேர்தல் கமிஷன் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தமக்குத் திருப்தி அளிப்பதாக பத்திரிகையாளர்களிடம் இவர் கூறினர் ...

... பாரா என்பது இன்னும் தெரியவில்லை.

1977 இல் நடைபெற்ற இராணுவ புரட்சியின் பின் ஆட்சியைக் கைப்பற்றியதும், நாட்டின் அரசமைப்பை ரத்துச் செய்தார். மேற்கத்திய முறையில் நாடாளுமன்ற முறைக்கு இந்த அரசமைப்பு இடம் அளித்திருந்தது.

தடை செய்யப்பட்ட பல கட்சிகள் நாடாளுமன்ற முறையைத் திரும்பவும் நடைமுறைப்படுத்துமாறு கோரியுள்ளன.

ஆனுல் இந்த முறை இஸ்லாமிய பாகிஸ்தானுக்கு ஒத்துவராதென்று ஷியா கூறியுள்ளார்.

பாகிஸ்தானில் இஸ்லாமிய முறையிலான அரசாங்கம் ஒன்றையே அமைக்கப் போவதாக ஷியா உல் ஹக் கூறி வந்துள்ளார்.

## பாக். எல்லையில்

## உலகச்

# பாக். எல்லையில் இந்திய துருப்புகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன

## இந்தியா பாகிஸ்தானிடம் அறிவிப்பு

ராவல்பிண்டி, ஜூன் 20

இந்திய மாநிலமான பஞ்சாப்புக்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் உள்ள எல்லைப் பிரதேசத்தில் படைகளை நிறுத்தியுள்ளதாக இந்தியா, பாகிஸ்தானுக்கு அறிவித்துள்ளது.

இவ்வாறு பாகிஸ்தானிய ஜனாதிபதி ஷியா உல் ஹக் நேற்றுக் கூறினர்.

தனது பாதுகாப்புக்குத் தேவையான நடவடிக்கைகளை பாகிஸ்தான் மேற்கொண்டுள்ளது. இது இந்தியாவுக்கு அச்சுறுத்தல்ல. இந்தப் பக்கத்திலிருந்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாதென அவர்கள் உறுதியாக நம்பலாம் என அவர் மேலும் கூறினர்.

சாதாரணமாக பாரா இராணுவத் துருப்பினர் நிறுத்தப்படும் எல்லைப்புறத்தில் சில இடங்களில் துருப்பினரை நிறுத்தியிருப்பதாக புதுடில்லி இஸ்லாமாபாத்துக்கு அறிவித்துள்ளது நல்லதென அவர் குறிப்பிட்டார்.

அமிர்தசரஸில் சீக்கிய தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் உதவி செய்ததென்ற இந்தியக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்று அவர் மேலும் கூறினர். (ந)

## ஆயுத தடை பற்றிய பேச்சுவார்த்தை

ஜெனீவா, ஜூன் 20

விண்ணில் இராணுவ செய்மதிகளை அழிக்கும் ஆயுதங்களைத் தடை செய்வதற்கான பேச்சுவார்த்தைகளில் அமெரிக்காவுடன் கலந்து கொள்ள ரஷ்யா விருப்பம் தெரிவித்துள்ளது. (ந)

# உலகச் செய்திகள்

# நோர்வேயின் இந்திய தூதுவர் ராஜினுமா

## அரசியல் தஞ்சம் கோருகிருர்

### பொற்கோயில் முற்றுகை காரணம்

ஒஸ்லோ, ஜூன் 20

நோர்வேயிலுள்ள இந்தியத் தூதுவர் ஹரிந்தர் சிங் தமது பதவியை இராஜினுமாச் செய்துள்ளார். சீக்கியரான இவர், இந்திய இராணுவத்தின் பொற்கோயில் முற்றுகைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இராஜினுமாச் செய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அத்துடன் நோர்வேயில் அரசியல் தஞ்சம் கோரி இவர் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிகிறது.

பொற்கோயில் முற்றுகையின் போது 2000 சீக்கியர்கள் கொல்லப்பட்டதாக பத்திரிகை மாநாடு ஒன்றில் பேசும் போது இவர் குறிப்பிட்டார்.

முற்றுகையில் சுமார் 1000 சீக்கியர்களும், துருப்பினரும் கொல்லப்பட்டதாக இந்திய அரசாங்கம் கூறுகிறது.

இராஜதந்திர வட்டாரத்தில் 37 வருடங்களாகக் கடமை புரிந்து வரும் ஹரிந்தர் சிங் பிரபல சீக்கிய குடும்பமொன்றைச் சேர்ந்தவர். நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துள்ள இவரது தந்தை இரண்டாவது உலக யுத்தத்தின் போது பிரிட்டிஷ் இராணுவத்திற்கு சீக்கியர்களை சேர்த்துக் கொள்ள பெரிதும் துணை புரிந்தவர்.

இவரது செயலை இந்திய தூதரகம் வன்மையாகக் கண்டித்துள்ளது. (ந)

## ஈரானிய விமானம் திருப்பி அனுப்பப்படும்

பிரான்ஸ், ஜூன் 20

நேற்று பிரான்ஸுக்கு வந்து சேர்ந்த ஈரானிய கடற்படை விமானம் திருப்பி அனுப்பப்படும்.

பிரான்ஸ் இவ்வாறு அறிவித்துள்ளது.

இந்த விமானத்திலிருந்த 8 ஈரானியர்களில் நால்வர் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர்.

மற்றைய நால்வர் ஈரானுக்குத் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர். (ந)

கள் தமக்குத் திருப்தி அளிப்பதாக பத்திரிகையாளர்களிடம் இவர் கூறினர்.

ஜனாதிபதி பதவியையும் வகித்து வரும் ஷியா உல் ஹக் 1977 இல் இராணுவப் புரட்சி ஒன்றின் மூலம் ஆட்சிக்கு வந்தார். அதன் பின் இரு தடவைகள் தேர்தல்களை நடத்துவதாக அறிவித்தார். ஆனல் இரண்டு தடவைகளும் தேர்தலை நடத்தாது பின்போடும்படி இவர் உத்தரவிட்டார்.

பாகிஸ்தானிய தேர்தல்களை 1985 ஆம் ஆண்டு மார்ச் 23 இல் நடத்தப் போவதாக கடந்த ஆகஸ்ட்டில் இவர் கூறியிருந்தார்.

பாகிஸ்தானின் எதிர்கால தேர்தல் முறைகளைப் பற்றி இன்னும் ஷியா உல் ஹக் தீர்மானிக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

1979 இல் இவர் தடை செய்த அரசியல் கட்சிகளைத் தேர்தலில் கலந்து கொள்ள வாய்ப்பளிப்

தடை செய்யப்பட்ட பல கட்சிகள் நாடாளுமன்ற முறை

ளார். (ந)

# தாய்வானுக்கு அமெரிக்க விமானங்கள்

வாஷிங்டன், ஜூன் 20

சீனவுக்கு ஆயுத விற்பனையை மேற்கொள்ளும் அதே வேளை, சீனவுடன் கொள்கை வேறுபாடு கொண்ட தாய்வானுக்கும் விமானங்களை விற்பனை செய்யப் போவதாக அமெரிக்கா கூறியுள்ளது.

தாய்வானின் விமானப்படையினர் உபயோகிக்கும் பழைய சி – 130 ஹெர்குலிஸ் விமானங்களுக்குப் பதிலாக 12 புதிய விமானங்களை அமெரிக்கா விற்பனை செய்யும்.

இந்த விமானங்களின் விலை 3250 லட்சம் டாலர்களாகும். விமானத்துடன் உதிரிப் பாகங்கள், பயிற்சி முறைகள் ஆகியவற்றிற்கான செலவும் இதில் அடங்குகிறது.

தாய்வானின் விமானப்படையில் 1940 ஆம் 1950 ஆம் ஆண்டு காலத்திய விமானங்களே உபயோகிக்கப்படுகின்றன.

கடந்த வாரம் ஆயுதப் பரிகரண பேச்சுவார்த்தைகளை நடத்த அமெரிக்காவுக்கு சீன பாதுகாப்பு அமைச்சர் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

1949 ஆம் ஆண்டின் பின் சீனவுடன் செய்து கொள்ளப்படும் முதல் ஆயுத பரிகரண பேச்சுவார்த்தைகள் இதுவாகும். (ந)

# ஆசிய நாடுகளின் அபிவிருத்திக்கு உலக வங்கி உதவி

## இந்தியா, பாக்., சீன, துருக்கி இந்தோனேஷியா நன்மை பெறும்

வாஷிங்டன், ஜூன் 20

ஆசிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக 1 கோடி டாலர் நிதியுதவியை வழங்குவதாக உலக வங்கி நேற்று அறிவித்தது.

இந்தியா, பாகிஸ்தான், சீன, இந்தோனேஷியா, துருக்கி ஆகிய நாடுகளுக்கு இந்த நிதியுதவி கிடைக்கும்.

இந்தியாவில் மின்சார உற்பத்தி நிலையமொன்றை உருவாக்குவதற்கு 3000 லட்சம் டாலர்களும் பாகிஸ்தானில் சிறு கைத்தொழில்கள் அபிவிருத்தித் திட்டமொன்றுக்கு 500 லட்சம் டாலர்களுக்குமான நிதியுதவியை உலக வங்கி அங்கீகரித்துள்ளது.

சீனவில் இடைத்தர, சிரேஷ்டதர விவசாய தொழில் நுட்ப விஞ்ஞர்களுக்கான பயிற்சிகளை மேம்படுத்தும் திட்டமொன்றுக்காக 688 லட்சம் டாலர் நிதியுதவி வழங்கப்படும்.

இந்தோனேஷியாவில், மேற்கு ஜாவாவிலுள்ள சுராலயா மின்சக்தி நிலையமொன்றை விஸ்தரிக்கும் திட்டமொன்றுக்கு 2100 லட்சம் டாலர் நிதியுதவியை வழங்குவதாக வங்கி அறிவித்துள்ளது.

துருக்கியில் முக்கிய பொருளாதார சீர்படுத்தும் திட்டமொன்றுக்கு 3760 லட்சம் டாலர்களுக்கான நிதியுதவி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (ந)

## மாத்துறையில் வீதி புனரமைக்க 4 கோடி நிதி

மாத்தறை, ஜூன் 21

மாத்தறை மாவட்ட நெடுஞ்சாலைகளைப் புனரமைப்பதற்கு அரசாங்கம் இந்த வருடம் 4 கோடி 34 லட்சத்து 67 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியிருக்கிறது.

தற்போது போக்குவரத்து வசதிகள் குறைவான தெனியாய, அக்குரஸ்ஸ, ஹக்மனே ஆகிய தொகுதிகளிலுள்ள பாதைகளின் புனரமைப்பு வேலைகளுக்காகவே இப்பணத்தில் பெரும் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. (எ—25)

## கிராமோதய சபை தலைவர்களுக்கு விசேட கருத்தரங்கு

கொழும்பு, ஜூன் 21

இராமோதய சபைத் தலைவர்களுக்கான விசேட கருத்தரங்கு இம்மாதம் 23ஆம் திகதி அனுராதபுரத்தில் நடைபெறும்.

அனுராதபுரம் கம்உதாவ கண்காட்சித் திடலில் நடைபெறும் மேற்படி கருத்தரங்கை பிரதமர் திரு. ஆர். பிரேமதாச அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்.

நாட்டின் பல பாகங்களிலுமுள்ள கிராமோதய சபைத் தலைவர்கள் இதில் கலந்து கொள்வார்கள்.

கிராமோதய சபை தொடர்பான பல விளக்கங்களும், அதன் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் மேற்படி கருத்தரங்கில் விரிவாக ஆராயப்படும்.

தொம்பே தொகுதி எம்.பியும், உணவு, கூட்டுறவுத் துறை பிரதி அமைச்சருமான திரு. சரத் சந்திர ராஜகருணா இக்கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிருர். (எ—11)

# பஞ்சாப் கலவரத்துக்கு பாகிஸ்தானை நான் குற்றஞ்சாட்டவில்லை

## பி. பி. சிக்கு இந்திரா பேட்டி

புதுடில்லி, ஜூன் 20

பஞ்சாப் கலவரத்துக்கு நான் பாகிஸ்தானைக் குற்றஞ்சாட்டவில்லை. ஆனல் கலவரத்தின் பின்னணியில் வெளிநாட்டு சக்திகள் சில செயற்பட்டிருக்கலாம் என்று நம்புகிறேன்.

பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார் இந்தியப் பிரதமர் திருமதி. இந்திரா காந்தி.

அமெரிக்க மத்திய உளவு அறியும் ஸ்தாபனமான சி. ஐ. [illegible] குற்றஞ்சாட்டவில்லை. ஆனல் வேறு நாடுகளில் சி. ஐ. ஏ. யின் நடவடிக்கைகள் பற்றியே தெரிவித்திருந்தேன் என்றும் அவர் தெரிவித்தார்.

அமிர்தசரஸ் பொற்கோயில் சம்பவம் பற்றி அவர் தெரிவித்ததாவது:—

பொற்கோயிலில் இராணுவம் நடத்திய தாக்குதலின் போது இவ்வளவு பெரிய உயிர்ச்சேதம் ஏற்பட்டதை அறிந்த பொழுது நான் அதிர்ச்சி அடைந்தேன். பொற்கோயில் விவகாரத்தில் இந்திய இராணுவம் சிறிது முன்னதாகவே [illegible] நிலைமை இவ்வளவு பாரதூரமடைவதைத் தவிர்த்திருக்கலாம்.

எனினும் இந்தக் காலம் பிந்திய நடவடிக்கையால், அரசாங்கம் இயலாத பட்சத்திலேயே ஆயுத பலத்தைப் பயன்படுத்தியது என்பதை வெளிக்காட்டி உள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினர்.

பேட்டியின் போது பம்பாயில் நடைபெற்ற இந்து – முஸ்லிம் இனக்கலவரம் பற்றியும் அவர் பிரஸ்தாபித்தார். பரந்த இந்தியாவில் இவை மிகச் சிறிய சம்பவங்களே என்று அவர் கூறினர். பஞ்சாப் சம்பவங்கள் இந்தியாவின் ஒற்றுமையைப் பாதிக்கவில்லை என்றும் அவர் சொன்னர். (த)

## விண்ணப்பங்களை பரிசீலனை செய்ய குழு நியமனம்

சித்தன்கேணி, ஜூன் 20

வலி தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பத்து லட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் கடன் கோரி விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்களை பரிசிலனைசெய்ய உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சண்முகநாதன் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

வலி தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஒவ்வொரு கிராம சேவை அலுவலர் பிரிவுக்கும் ஒவ்வொரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

இக்குழுக்கள் தத்தமது பிரிவுகள் தோறும் கடன் கோரி விண்ணப்பித்தவர்களது விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து உதவி அரசாங்க அதிபர் தலைமையிலான குழுவுக்கு அனுப்பி வைக்கும்.

இக்குழுக்களினல் சிபார்சு செய்து அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்களை இறுதியாகப் பரிசீலனை செய்து கடன் வழங்குவதற்காக உதவி அரசாங்க அதிபர் தலைமையிலான குழுவொன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது.

யாழ். தேசிய வீடமைப்பு அதிகார சபையைச் சேர்ந்த தொழில் நுட்ப உத்தியோகத்தர் திரு. கே. தெய்வேந்திரம் இக்குழுவின் செயலாளராகக் கடமையாற்றி வருகின்றார்.

(எ—283)

# மகாவலி திட்டங்களை

# விவசாயிகள்

# பார்வையிட வசதி

## தொகுதிதோறும் 25 பேர் தெரிவு செய்யப்படுவர்

கொழும்பு, ஜூன் 21

மகாவலி அபிவிருத்தி வேலைத் திட்டங்களைப்பார்வையிடுவதற்கு சகல தொகுதிகளிலுமுள்ள விவசாயிகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

ஒவ்வொரு தேர்தல் தொகுதியில் இருந்தும் 25 விவசாயிகள் வீதம் இதற்காகத் தெரிவு செய்யப்படுவர்.

அதன் பின்னர் மேற்படி விவசாயிகளுக்கான இலவச சுற்றுலா ஏற்பாடு செய்யப்படும்.

இந்த இலவச சுற்றுலாவை, இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகார சபை ஏற்பாடு செய்யும்.

விவசாய அபிவிருத்தி, ஆராய்ச்சித்துறை அமைச்சின் ஒத்துழைப்புடன் கமநல சேவை அதிகாரிகள் மூலமாக அந்தந்தத் தொகுதியிலிருந்து விவசாயிகள் தெரிவு செய்யப்படுவர்.

விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டதும் இந்த வேலைத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும்

மகாவலி அதிகார சபை அதிகாரி திரு. அமரநந்த வீரசிங்க இத்தகவலைத் தெரிவித்தார்.

மகாவலி வேலைத் திட்டங்கள், மகாவலி விவசாயக் குடியேற்றத் திட்டங்களைப் பார்வையிடவும் நவீன முறையில் விவசாயச் செய்கைகளை மேற்கொள்வது பற்றிய அறிவினைப் பெறவும் இச் சுற்றுலா மூலம் விவசாயிகளுக்கு வாய்ப்புக்கிட்டும்.

(எ—11)

## சம்பள உயர்வு தோ. சேவையாளருக்கு உடன் வழங்கப்பட வேண்டும்

### பதுளை மாவட்ட பிரதிநிதி கோரிக்கை

அப்புத்தளை, ஜூன் 20

தோட்ட சேவையாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்குமாறு, அண்மையில் உலக வங்கி சிபார்சு செய்தது. அதற்கமைய சம்பள உயர்வை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு தோட்டச் சேவையாளர் சங்க பதுளை மாவட்டப் பிரதிநிதி திரு. ரொபர்ட் பெரேரா கூறினர்.

அண்மையில் தோ. சேவையாளர் சங்க உறுப்பினர்களின் கூட்டம் ஒன்று பண்டாரவளையைச் சேர்ந்த பள்ளேகெட்டுவ மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே திரு. பெரேரா மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

தோட்டத் தொழிற்துறையில் தோட்ட சேவையாளர்களின் பங்கு மிக முக்கியமானதாகும்.

சேவையாளர்கள் தமது தகுதிக்கும் தரத்திற்கும் அமைய வாழ வேண்டியிருக்கிறது.

நாளுக்கு நாள் விலைவாசி உயர்ந்து செல்கின்றது. இதனல் சேவையாளர்களால் தமது வாழ்க்கையினை சிறப்பாக நடத்த முடியவில்லை.

பிரிட்டிஷ் காலத்தில் வழங்கப்பட்ட சலுகைகள் மட்டுமே தோட்டச் சேவையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

அரசாங்கம் தோட்டங்களைப் பொறுப்பேற்றபின், கூடுதலான வசதிகளும் சலுகைகளும் கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்டது.

ஆனல் இதுவரை அவ்வாறான சலுகைகளோ வசதிகளோ கிடைக்காமல் இருப்பது கவலையளிக்கின்றது.

இவ்வாறு அவர் கூறினர்.

(எ—100)

## மக்களும் பதவியும்

### பட்டம் பெற்ருர்

கொழும்பு, ஜூன் 21



கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தையைச் சேர்ந்த ஜனப் எம். எம். அஷ்ரப், அண்மையில் ஸ்ரீ ஜெயவர்தனப்புர பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவினல் எம். பீ. ஏ. பட்டம் சூட்டி கௌரவிக்கப்பட்டார்.

வர்த்தக உலகில் உயர்ந்த பட்டமாகக் கருதப்படும் எம். பீ. ஏ. பரீட்சை இலங்கையில் நடத்தப்பட்டது இதுவே முதன் முறையாகும்.

கொழும்பு அல் — ஹிதாயா மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர் இலங்கை வங்கி பயிற்சி நிலையத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றுகிருர்.

இவர் சிறந்த சமூக சேவையாளர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

(எ)

### பிரதேச சபை தலைவர்கள்

பேசாலை, ஜூன் 20

மன்னர் மாவட்ட பிரதேச சபைத் தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விவரம்:

மன்னர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு — ஜனப் எம். எம். இப்ருகிம்

அடம்பன் உதவி அரசாங்க அதிபர் பிரிவு — திரு. பிறைசூடி.

நானுட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவு — திரு. செபஸ்தியாம்பிள்ளை.

சிலாவத்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு — ஜனப் எம். ஓபார்.

(எ—251)

### நிர்வாகிகள்

பேசாலை, ஜூன் 20

தலைமன்னர்துறை ஐ. தே. கட்சிக் கிளையின் புதிய நிர்வாகிகள் விவரம்:

தலைவர்: ஜனப் எச். ஜவ்பர், செயலாளர்: ஜனப் எச். எஸ். அகமட், துணைச் செயலாளர்: ஜனப் எஸ். எச். எம். தல்ஹான்

## தொழிலாளர் சம்பளப் பணம் திருட்டு

### சந்தேகத்தில் சின்னதுரை கைது

கம்பளை, ஜூன் 20

தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்குவதற்குக் கொண்டு வந்த சம்பளப் பணம் திருடப்பட்டது சம்பந்தமாக அதே தோட்டத்தில் கடமையாற்றி வந்த தோட்ட சின்னதுரை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

புசல்லாவ பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே பொலிஸார் இவரைக் கைது செய்தனர்.

புசல்லாவை பொலிஸ் வட்டாரத்தைச் சேர்ந்த ஜனவசம நிர்வாகத்தின் கீழ் இயங்கி

மேற்படி தோட்ட சின்னதுரை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கம்பளை மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திரு. காமினி அபேரட்ன முன்னிலையில் அவர் ஆஜர் செய்யப்பட்டார்.

தோட்ட சின்னதுரையின் சார்பில் கலவானை எம். பி-யும், பிரபல சட்டத்தரணியுமான திரு. சரத் முத்தெட்டுவேகம ஆஜரானர்.

அவர் தமது மனுவில் அவருடைய மனுதாரருக்குப் பிணை வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

எதிராளிக்கு பிணை வழங்க ஆட்சேபனை தெரிவிக்கிறோம்

## ஏழைகளுக்கு உணவு அன்பளிப்பு



## மாணவர் கடத்தல் முயற்சி முறியடிப்பு

பண்டாரவளை, ஜூன் 20

பாடசாலைக்குச் சென்ற மூன்று மாணவர்களைக் கடத்திச் செல்ல முயற்சித்ததாகக் கூறப்படும் ஒரு சம்பவம் பாடசாலை அதிபரின் சமயோசித நடவடிக்கையால் முறியடிக்கப்பட்டது.

மாணவர்களைக் கடத்திச் செல்ல முயன்ற சந்தேக நபர் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கிருர்.

பண்டாரவளை பொலிஸ் நிலைய

புசல்லாவை பொலிஸ் வட்டாரத்தைச் சேர்ந்த ஜனவசம நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் இரு பிரபல தோட்டத்திலேயே மேற்படி சம்பவம் நடைபெற்றது.

பிரஸ்தாப தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு வங்கியிலிருந்து தோட்ட பெரிய துரையும் சின்னதுரையும் பணத்தைக் கொண்டு வந்துள்ளனர்.

தோட்டத்திற்கு வந்ததும் கொண்டு வந்த 6 பைகளில் 5 பைகள் மாத்திரமே காணப்பட்டதாம்.

இதையிட்டு அதிர்ச்சியடைந்த பெரியதுரை சந்தேகத்தின் பேரில் அண்மையில் உள்ள பொலீஸ் நிலையத்தில் புகார் செய்து இருந்தார். இதை அடுத்து சின்னதுரையின் பங்களாவை சந்தேகத்தின் பேரில் பொலீஸார் சோதனையிட்டனர். அங்கிருந்து பணம் பின்னர் கிடைத்ததாகக் கூறப்படுகிறது.

...து.

எதிராளிக்கு பிணை வழங்க ஆட்சேபனை தெரிவிக்கிறோம் என பொலீஸ் தரப்பில் கூறப்பட்டது.

இதையடுத்து மாவட்ட நீதிபதி பிணை வழங்க மறுத்து தோட்ட சின்னதுரையை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார் (எ-83)

## மூதூரில் கசிப்பு உற்பத்தி

மூதூர், ஜூன் 20

மூதூர் பகுதியில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

மூதூர் பொலிஸ் பிரிவில் உள்ள கிராமப் பகுதிகளிலேயே இக்கசிப்பு உற்பத்தி நடைபெறுகின்றது.

இப்பகுதியில் கசிப்பு உற்பத்தியில் பெண்களே பெரும் அளவில் ஈடுபட்டு வருகின்றனராம். (எ-186)



கடந்த பொசன் தினத்தை முன்னிட்டு (13 ஆம் திகதி) அரச திரைப்படக் கூட்டுத்தாபன ஊழியர்கள் ஆயிரக் கணக்கான உணவுப் பொதிகளை ஏழை மக்களுக்கு விநியோகித்தனர்.

கொழும்பு நகரெங்கும் இன, மத, மொழி பாகுபாடின்றி இவ் விநியோகம் இடம்பெற்றது.

இவ்வைபவத்தில் திரைப்படக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. அன்டன் விக்கிரமசிங்ஹ, பொது முகாமையாளர் திரு. டபிள்யூ. பி. ரத்நாயக்க, கலாநிதி கே. எஸ். நடராஜா, திரைப்படக் கூட்டுத்தாபன விளம்பர அதிகாரியும், வானொலி அறிவிப்பாளருமான திரு. கே. எஸ். ராஜா, ஆகியோரும் ஏனைய ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

கடந்த கலவரத்தின் போது பாதிக்கப்பட்டு வீடுகளையும், உடைமைகளையும் இழந்து அகதிகளாக வெள்ளவத்தை புனித ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலயத்தில் தஞ்சமடைந்தோருக்கு உணவுப் பொதிகள் முதன் முதலாக விநியோகிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திலும், பள்ளி வாசல்களிலும், பௌத்த ஆலயங்களிலும் விநியோகம் நடைபெற்றது. (எ)

# தொழிலாளர் சம்பள உயர்வு
## உயர்மட்ட குழுவின் அறிக்கை தயார்
### நியாயமான முடிவு கிடைக்கும் எனக் கருத்து

கொழும்பு, ஜூன் 21

தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வு தொடர்பாக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உயர் மட்டக் குழு அதன் முதற் கட்ட அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது. தோட்டத் தொழிலாளருக்கு இதன் மூலம் நியாயமான ஒரு முடிவு ஏற்படுமென நாம் கருதுகின்றோம்.

தொழிலாளர் தேசிய சங்கப் பொதுச் செயலாளர் திரு. பி. வி. கந்தையா இவ்வாறு கூறினார்.

கொழும்பில் நடைபெற்ற உத்தியோகத்தர்கள் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:—

கடந்த வேலைநிறுத்தப் போராட்டத்தின் விளைவாக தோட்டத் தொழிலாளருக்கு தற்காலிக சம்பள உயர்வே கிடைத்திருக்கிறது. முற்றாக தொழிற் சங்கங்களின் சம்பள உயர்வுக் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. இது பெரும் குறையாகும்.

தோட்டத் தொழிலாளருக்கு அண்மையில் வழங்கப்பட்ட சம்பள உயர்வு குறித்துப் பரவலாகப் பேசப்படுகிறது. தொழிலாளர் அதிக வருவாயைப் பெறுகின்றனர் என ஒரு சாரார் கூறுகின்றனர்.

குடும்ப ரீதியாக இந்தச் சம்பள உயர்வு தொழிலாளருக்குப் போதுமானதாக இல்லை.

விலைவாசிகள் ஏற்றம், வாழ்க்கைப் பளு ஆகியவற்றால் படுமோசமாக பாதிப்படைந்திருக்கும் தோட்டத் தொழிலாளரால் மேற்படி சம்பள உயர்வால் பூரணத்துவமான விமோசனத்தை அடைய முடியவில்லை.

இப்போது சம்பள உயர்வு தொடர்பான குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. இதன் சிபார்சுகள் எம்மால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவே இருக்க வேண்டும். இது விடயத்தில் நாம் கண்ணும் கருத்துமாக செயல்படத் தவறக் கூடாது.

கூட்டுப் போராட்டத்தின் மூலமாகவே எம்மால் எதையும் சாதிக்க முடியும். சமீபத்திய போராட்டம் இதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

இன்று நாம் எதிர்நோக்கும் மாதச் சம்பளக் கோரிக்கையில் வெற்றிபெற ஐக்கியத்துடன் செயல்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். (எ)

# மனித உரிமைக்காகவா போராடுகிறார்கள்?
## குருநாகல் கூட்டத்தில் பிரதமர் கேள்வி

குருநாகல், ஜூன் 20

இந்தியாவில் அரசுக்கெதிராகக் கிளர்ந்தெழும் சீக்கியரைப் பயங்கரவாதிகள் துரோகிகள் என இந்திய அரசு குற்றம் சாட்டுகின்றது. இலங்கையில் அரசுக்கெதிராக தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபடுபவர்களை மனித உரிமைக்காகப் போராடுபவர்கள் என இந்தியா கூறுகின்றது.

இவ்வாறு பிரதமர் திரு. ஆர். பிரேமதாச கூறினார்.

குருநாகல் ஹிரியால தொகுதியில் காலஞ்சென்ற முன்னாள் உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. ஹேரத் ஞாபகார்த்தமாக ஹேரத் கம மாதிரிக் கிராமம் திறந்து வைக்கப்பட்டது. இதனைப் பிரதமர் திறந்து வைத்தார்.

பிரதமர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

இந்தியாவில் இருக்கும் இலங்கைத் தீவிரவாதிகளை இலங்கைக்கு இந்தியா திருப்பியனுப்ப வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் உலக அரங்கில் இந்தியாவுக்கு இருக்கும் நன்மதிப்பை இழக்க நேரும்.

தீவிரவாத நடவடிக்கைக்கு இந்தியா ஆதரவு கொடுத்து, இலங்கையை ஆக்கிரமிக்க எத்தனிக்கின்றது.

இலங்கையில் தீவிரவாதத்தை முற்றாக ஒழிப்பதற்காக பெருந்தொகைப் பணத்தை எமது அரசாங்கம் செலவிட்டு வருகின்றது.

நாம் பயங்கர வாதத்தை நாட்டில் நின்றும் முற்றாக ஒழித்துக்கட்ட திடசங்கற்பம் பூண்டிருக்கிறோம்.

மூன்று மாத காலத்துள் அதனை நிச்சயம் நிறைவேற்றுவோம்.

இவ்வாறு பிரதமர் கூறினார். ([illegible]-138)

# "சுயநல நோக்கத்துடன் சங்கங்களை அமைக்கக் கூடாது"

கெக்கிராவ, ஜூன் 20

அரசியல் வாதிகளோ அன்றி தனியானவர்களோ சமூக நலன் என்ற போர்வையில் சங்கங்களை அமைத்து அவற்றை சுய நலனுக்காகப் பயன்படுத்தக் கூடாது.

இவ்வாறு பொலன்னறுவை மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பொலன்னறுவை மாவட்ட வை. எம். எம். ஏ. இயக்கக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய ஜனாப் ஏ. எல். தாகா நஜிமுதீன் கூறினார்.

சுமார் இருபத்திநான்கு முஸ்லிம் கிராமங்களிலிருந்து முஸ்லிம் பிரமுகர்கள் கூட்டத்திற்குச் சமுகமளித்திருந்தனர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

முஸ்லிம் மக்கள் மத்தியில் தீர்க்கப்பட வேண்டிய பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முயற்சிகளில் ஓரளவேனும் வை. எம். எம். ஏ. இயக்கமே ஒத்துழைப்பு நல்குகின்றது.

எச் சங்கங்கள், எத்தலைவர்கள் மூலமாக எமது குறைகள் நிவர்த்தி செய்யப்படுகின்றனவோ அவர்களோடு ஒற்றுமையாக செயல்பட்டு பிரச்சினைகளுக்கு விடிவுகாண நாம் முயல வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். (எ-158)

விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

பண்டாரவளை பொலீஸ் நிலைய அதிகாரி ஜனாப் எம். ஆர். டி- பங்சா ஜாயா தலைமையிலான பொலீஸ் கோஷ்டி புலன் விசாரணைகளை மேற்கொண்டது.

கப்படும்.

(எ-39)

# தேயிலை, றப்பர் உற்பத்திகளை பெருக்க ஏற்பாடு

வெலிகாமம், ஜூன் 20

மாத்தறை மாவட்டத்தில் தேயிலை, றப்பர் உற்பத்திகளைப் பெருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

மாத்தறை மாவட்ட விவசாயக் கமிட்டி இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இம்மாவட்டத்தில் உள்ள தேயிலை, றப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு உற்பத்தி செய்யும் முறை பற்றிய விளக்கங்களை அளிப்பதற்கும் மேற்படி கமிட்டி முடிவு செய்திருக்கிறது. (எ-331)

## பொலன்னறுவை மாவட்ட
# விவசாயிகளுக்கு மின் விநியோகம் வழங்க ரூ. 215 லட்சம் நிதி

கொழும்பு, ஜூன் 21

பொலன்னறுவை மாவட்ட விவசாயக் குடும்பங்களுக்கு மின்சார வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக இந்த வருடம் 215 லட்சம் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கவிருக்கிறது.

இதன்படி ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் பெறப்படும் நிதியுதவிகளைக் கொண்டு பொலன்னறுவை மாவட்டத்தில் இருபது மின்சாரத் திட்டங்கள் அமைக்கப்படும்.

பொலன்னறுவை மாவட்ட அமைச்சர் திரு. ஏ- டீ. பீ ஏக்கநாயக்கா தமது அமைச்சில் நடத்திய கூட்டம் ஒன்றில் இதனைத் தெரிவித்தார்.

பொலன்னறுவை மாவட்டத்தில் 20 ஆயிரம் வீடுகளுக்கு மின்சார வசதி பெற வேண்டியிருக்கிறது. ஆனால் தற்சமயம் இரண்டாயிரம் வீடுகளுக்கு மட்டுமே மின்சார வசதி உண்டு.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடனும் இவ்வருடத்தில் 200 லட்சம் ரூபாவும், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 15 லட்சம் ரூபாவும் பெறப்படும். இந்தப் பணத்தில் மேற்படி மாவட்டத்திற்கான மின்விநியோகம் விஸ்தரிக்கப்படும்.

பொலன்னறுவை மாவட்ட அமைச்சர் இத்தகவலைத் தெரிவித்தார். ([illegible])

செயலாளர்: ஜனாப் எச். எஸ். அகமட், துணைச் செயலாளர்: ஜனாப் எஸ். எச்- எம். தல்ஹான், பொருளாளர்: ஜனாப் ஏ- எஸ். ஏ. ரகுமான்

10 பேர் கொண்ட நிர்வாக சபைக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (எ-251)

★

ஓட்டமாவடி, ஜூன் 20

கிரானை அடுத்துள்ள கோர கல்லிமடு கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் விவரம்:

தலைவர்: திரு. நடா ஜெயரட்ணராஜா, உப தலைவர்: திரு. சின்னக்குட்டி தில்லையம்பலம், உப தலைவி: திருமதி தியோனி இராஜேஸ்வரி செல்வராஜா, செயலாளர்: திரு. சிவகுரு ரகு, உப செயலாளர் செல்வி சின்னக்குட்டி பத்தினி, பொருளாளர்: திருமதி கிருஷ்ணபிள்ளை செல்வமணி, கணக்குப் பரிசோதகர்: திருமதி தேவராசா பிரேமாவதி.

செயற்குழு உறுப்பினர்கள்: சிவகுரு ரவிந்திரா, கதிராமன் சிவமணி, காசுபதி நவமணி, கதிராமன் துரைசாமி, குஞ்சித்தம்பி சின்னராசா இரத்தினசிங்கம் மாதவராசா, கந்தப்பர் நல்லதம்பி. (எ-236)

★

ஓட்டமாவடி, ஜூன் 20

வாழைச்சேனை முஸ்லிம் பகுதியில் பத்தாண்டு காலமாக இயங்கிவரும் இஸ்லாமிய நன்னெறி இயக்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் விவரம்:

தலைவர்: ஜனாப் ஈ. எல். இப்றுலெவ்வை, உப தலைவர்: ஜனாப் எம்- எம்- முஸ்தபா, செயலாளர். ஜனாப் ஐ. எல். ஏ. கபூர், துணைச் செயலாளர்: ஜனாப் எஸ். ஏ. கமறுதீன், பொருளாளர்: ஜனாப் எஸ். எம். அகமது லெப்பை.

செயற்குழு உறுப்பினர்கள்: ஜனாப்கள் எம். ஏ- நூர்தீன், எச். எம். முகம்மது புஹாரி, எஸ். முகம்மது ஹுசைன், எம். ஐ- எம். புகாரி, எம். ரீ. முகம்மது பரீட். (எ-236)

★

பேசாலை, ஜூன் 20

செட்டிகுளம் – பெரிய புளியாலங்குளம், பாரதி சனசமூக நிலைய நிர்வாகிகள்:

தலைவர்: திரு. என். விமலராஜா, உபதலைவர்: திரு. ஆர்- சிவநாதன், செயலாளர்: திரு. எஸ். சந்திரகுமார். (எ-251)

## வானொலி

21 — 6 — 1984

காலை –
5.30 நாதாஞ்சலி
5.35 பஜனைப் பாடல்கள்
5.50 பக்திப் பாடல்கள்
6.00 சைவ நற்சிந்தனை
6.05 இஸ்லாமிய நற்சிந்தனை
6.10 பாமாலை
6.30 செய்திகள்
6.50 மெல்லிசைப் பாடல்
7.00 வயலின் – எல். வைத்திய நாதன்
7.30 மாகாணச் செய்திகள்
7.35 இசையமுதம்
8.05 வாத்திய மஞ்சரி
8.15 முஸ்லிம் நிகழ்ச்சி

மாலை –
6.00 செய்திகள்
6.10 அறிவிப்புகள்
6.20 இப்தார் நிகழ்ச்சி
6.35 திருவருள்நெறி
7.05 முஸ்லிம் நிகழ்ச்சிகள்

இரவு –
8.00 உலகச் செய்திகள்
8.10 இளஞ்சுடர்
8.40 "தகவல்"
9.00 செய்திகள்
9.30 பாட்டு – எஸ். கணபதிப் பிள்ளை

## டெலிவிஷன்

### ரூபவாஹினி

5.30 பிக் புளூ மார்பிள்
5.55 ஹியர்ஸ் பூமர்
6.20 "கால்நடைச் செல்வம்" விவரணச் சித்திரம்
6.55 செய்திகள் – தமிழ்
7.15 "காதம்பரி" பல்சுவை நிகழ்ச்சி (தமிழ்)
7.45 பியூசர் அட்ரக்சன்ஸ்
8.15 செய்திகள் – சிங்களம்
8.35 "விதுர ஜாதகய"
9.05 வின்ட்ஸ் ஒப் வோர்
9.30 செய்திகள் – ஆங்கிலம்
9.50 வின்ட்ஸ் ஒப் வோர் (தொடர்ச்சி)
10.30 உலகச் செய்திகள்

### ஐ. டி. என்.

6.31 ஜஸ்ட் வில்லியம்
7.00 பிரைட் அன்ட் பிறீஸி
8.00 அறு அன்ட் கிங்
8.30 மேபெயார் – 84
8.45 இசை, கார்ட்டூன்
9.00 கோல்டன் இயர்ஸ்
9.30 செய்திகள் – ஆங்கிலம்
9.45 கோல்டன் இயர்ஸ் (தொடர்ச்சி)

## மானிப்பாய் மெமோரியல்

# தேசிய ஐக்கியத்துக்கு விளை.போட்டிகள் உதவி

## உதவி பொலீஸ் அத்தியட்சகர் கூற்று

பேசாலை, ஜூன் 20

விளையாட்டுப் போட்டிகள் தேசிய ஐக்கியத்தைக் கட்டி எழுப்புவதற்கு உதவுகின்றன. விளையாட்டு மைதானங்களில் எமக்கிடையே ஏற்படும் ஐக்கிய உணர்வு வாழ்க்கையிலும் பிரதிபலிக்க வேண்டும்.

இவ்வாறு எருக்கலம்பிட்டி யாஹரா ஒற்றுமை இயக்கத்தினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியின்போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய மன்னார் உதவி பொலீஸ் அத்தியட்சகர் திரு. இராஜேஸ்வரன் தெரிவித்தார்.


இவ் உதைபந்தாட்டப் போட்டி அமரர் ஈ. சாகுல் ஹமீத் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்காக நடத்தப்பட்டது.

இப்போட்டியின் போது தொடர்ந்து உரையாற்றிய மன்னார் உதவி பொலீஸ் அத்தியட்சகர் தமது உரையின் போது,

கிராமியமட்டத்தில் இலைமறை காயாக இருந்து வரும் விளையாட்டு வீரர்கள் நவீன ரீதியிலான விளையாட்டு வீரர்களைப் பின்பற்றி விளையாட்டுத் துறையில் முன்னேற முயற்சிக்க வேண்டும்.

விளையாட்டுத் துறையில் ஈடுபடுவதன் மூலம் உடலையும், மனதையும் வளர்க்க முடியும்.

எருக்கலம்பிட்டிப் பகுதி விளையாட்டு வீரர்கள் உதைபந்தாட்டத்தில் முன்னேறியிருப்பது பாராட்டத்தக்கதாகும் என்று கூறினார். (ந–251)



மட்டக்களப்பு கோட்டமுனை மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இப்போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட திட்டமிடல் பணிப்பாளர் திரு. என். தர்மலிங்கம், முதலிடம் பெற்ற நல்லையா இல்லத்தின் தலைவருக்கு வெற்றிக் கேடயத்தைப் பரிசளிப்பதைப் படத்தில் காண்க. (ந–318)

[படம் – இரா. உதயகுமார்]

# விளையாட்டுப் பகுதி



# இந்து சமய பரீட்சையில் சித்தி பெற்றோர்

சித்தன்கேணி, ஜூன் 10

மூளாய் இந்துசமய மன்றத்தினர் மாணவ மாணவியரிடையே இந்து சமய அறிவை விருத்தி செய்யும் நோக்கத்துடன் ஆண்டு தோறும் இந்து சமயப் பரீட்சைகளை நடத்திவருகின்றனர்.

இவ்வாண்டு (1984) பாலர் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கிடையே நடத்திய பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின.

இப் பரீட்சைகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விவரங்கள் வருமாறு:—

* பாலர் வகுப்பு: சி. வளர்மதி, ப. உஷாநந்தினி, செ. சிவஞானேஸ்வரி.
* முதலாம் வகுப்பு: ச. நந்தினி, சி. வைகுந்தவாசன், மு. சூரியப்பிரகாஷ்.
* இரண்டாம் வகுப்பு: கி. அருணக்குமார், ந. தயாபரன், வி. சுதர்சினி.
* மூன்றாம் வகுப்பு: சி. மதனகுமார், த. யாழினி, சி. செல்வக்குமார்.
* நான்காம் வகுப்பு: வி. சுபாஜினி, பொ. விசாகன், தி. ஜெயதாஸ்.
* ஐந்தாம் வகுப்பு: ம. சாந்திமாலா, பா. மோகன், இ. கிருஷ்ணமணி,
* ஆறாம் வகுப்பு: பொ. இராசேஸ்வரி, பி. மேகலா, நா. சுகிர்தன்.
* ஏழாம் வகுப்பு: த. அகிலன், சி. பன்னீர்தாசன், செ. பிரேமகுமார்.
* எட்டாம் வகுப்பு. த. பங்கயச் செல்வி, இ. ராதாகிருஷ்ணன், து. நந்தகுமார்.

ஒன்பதாம் வகுப்பு: த. சுகந்தன், சி. சிவஞானவேல், ம. அற்புதமலர்.

* பத்தாம் வகுப்பு: து. செல்வராணி, சோ. யசோதரன், சி. குமரன். (எ–283)

## சாராயத்தில் தண்ணீர் கலப்படம் கண்டுபிடிப்பு

பதுளை, ஜூன் 20

அரச வடிசாலைகள் கூட்டுத்தாபனத்தில் சாராயப் போத்தலில் தண்ணீர் கலப்படம் செய்யப்படுவதாகப் புகார் கூறப்படுகிறது.

இச்சம்பவம் பதுளையில் உள்ள அரச வடிசாலைகள் கூட்டுத்தாபனத்தில் கடந்த வாரம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பதுளை அரச வடிசாலைகள் கூட்டுத்தாபனத்திலிருந்து 3000 போத்தல் சாராயம் ஒரு லொறி மூலமாக வெளியில் கொண்டு வரப்பட்டன.

அப்போது கலால் திணைக்கள அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தினர்.

மக்கள் செய்த புகார்களைத் தொடர்ந்தே இத் திடீர் சோதனை நடைபெற்றது.

தண்ணீர் கலப்படம் தொடர்பாக பல முறை புகார்கள் செய்யப்பட்டுள்ளன.

கலால் திணைக்கள அதிகாரிகள் பல தடவைகள் சோதனையிட்ட போதும் அவற்றை ஒரு முறையேனும் கண்டுபிடிக்க முடியவில்லையாம்.

எனவேதான் வடிசாலைகள் கூட்டுத்தாபனத்தில் இருந்து போத்தல்களை வெளியே எடுக்கும் போது சோதனை நடத்தப்பட்டது.

தண்ணீர் கலப்படத்தால் கூட்டுத்தாபனத்திற்கு பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (எ—37)


## இன்றைய திரைகளில்

5–வதுவாரம்

சமந்தா
10.00, 2.00, 6.00, 9.30

வின்ஸர் (யாழ். நகர்)
10.30, 2.30, 6.00, 9.30

சரஸ்வதி (திருமலை)
6–00 9–30.

மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
நடித்த

ஒளி விளக்கு

(கலர்)
(புத்தம் புதிய கொப்பி)


# வர்த்தகசேவைகள் உதைபந்தாட்டம்

## 13 அணிகள் பங்கு பற்றும்

கொழும்பு, ஜூன் 21

வர்த்தக சேவைகள் உதைபந்தாட்ட ஒன்றியம் ஏற்பாடு செய்துவரும் வர்த்தக சேவை உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 13 அணிகள் பங்குபற்றுகின்றன.

இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும் இந்த அணிகளில் "ஏ" பிரிவில் 6 அணிகளும் "பீ" பிரிவில் 7 அணிகளும் இடம் பெறுகின்றன.

## 1 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி

# மேற்கிந்திய அணி

## மானிப்பாய் மெமோறியல் வெற்றி

சித்தன்கேணி, ஜூன் 20


மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலக் கல்லூரிக்கும் சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்திற்குமிடையே நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டிகளில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலக் கல்லூரி வெற்றியீட்டியது.

19, 17, 15 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கிடையே நடைபெற்ற இப்போட்டிகளில் மானிப்பாய் மெமோறியல் மூன்று பிரிவுகளிலும் வெற்றியீட்டியது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகள் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டிகளுக்கு ஆசிரியர் எம். பரராஜசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

(ந—283)



புத்தளம் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுனர்ப் போட்டியில் வென்னப்புவை உதவி அரசாங்க அதிபர் பிரிவு முதலிடத்தைப் பெற்றது.

வென்னப்புவை பிரிவின் வீரர்களும், வீராங்கனைகளும் தமக்குப் பரிசாகக் கிடைத்த வெற்றிக் கேடயங்களுடன் படத்தில் காணப்படுகின்றனர்.

(ந*த)

## மேற்கிந்திய அணி இன்னிங்ஸால் வெற்றி பெற்றது

எட்பாக்ஸ்டன், ஜூன் 20

மேற்கிந்திய அணிக்கும், இங்கிலாந்து அணிக்குமிடையே நடைபெற்ற முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்திய அணி ஒரு இன்னிங்ஸ் 180 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

ஐந்து நாட்கள் நடைபெறவிருந்த இப்போட்டி 3½ நாட்களிலேயே முடிவுற்றது குறிப்பிடத்தக்கது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 191 ஓட்டங்களையே பெற்றது.

சகலதுறை ஆட்டக்காரரான இயன் பொத்தம் ஆகக் கூடுதலாக 64 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் ஜோயெல் கார்னர் 53 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு ஆடிய மேற்கிந்திய அணி முதல் இன்னிங்ஸில் 606 ஓட்டங்களைப் பெற்றது.

லெறி கோமஸ் (143), விவியன் ரிச்சர்ட்ஸ் (117), எல்டின் பெப்டிஸ்ட் (ஆட்டமிழக்காது 87), அணித் தலைவர் கிளைய்வ் லொய்ட் (71), மைக்கல் ஹோல்டிங்(69). ஆகியோர் அதிக ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் டெறிக் பிரின்கில் 108 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.

இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் சகல விக்கட்டுகளையுமிழந்து 235 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

விக்கெட் காப்பாளர் போல் டவுன் டவுன் 56 ஓட்டங்களையும், சகலதுறை ஆட்டக்காரர் டெறிக் பிரின்கில் ஆட்டமிழக்காமல் 46 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஜோயெல் கார்னர் பந்து வீச்சில் 55 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி தமது பந்துவீச்சுத் திறமையை நிரூபித்துக் காட்டினார்.

ஓட்ட விவரம்:—

இங்கிலாந்து — முதல் இன்னிங்ஸ் — 191 ஓட்டங்கள்.

இரண்டாவது இன்னிங்ஸ் — 235 ஓட்டங்கள்.

மேற்கிந்தியா — முதல் இன்னிங்ஸ் — 606 ஓட்டங்கள்.

பெறுகின்றன.

"ஏ" பிரிவில் இடம்பெறும் 6 அணிகளும் வருமாறு:—

எயார் லங்கா, கிறின்டிலேஸ் வங்கி, பாடாஸ், எயார் லங்கா (கேடரிங்), லேக் ஹவுஸ், பிரவுன்ஸ் ஆகியவை.

"பி" பிரிவில் சிங்கர்ஸ், ஆர்பி கோஸ், சாமுவேல்ஸ்; லீவர்ஸ், ஹோட்டல் லங்கா ஒபரோய், யுனைடட் இலக்ட்ரிகல்ஸ் ஆகிய 7 அணிகள் இடம் பெறுகின்றன.

(ந)

## ஒலிம்பிக்குக்கு சீனவிலிருந்து 2 பனிக் கரடிகள்

லொஸ் ஏஞ்ஜல்ஸ்,ஜூன் 20

லொஸ் ஏஞ்ஜல்ஸ் ஒலிம்பிக் கிராமத்துக்கு விளையாட்டு வீரர்களுடன் இரண்டு "பண்டா" பனிக் கரடிகளையும் சீன அனுப்பி வைக்கவுள்ளது.

அடுத்த மாதம் லொஸ் ஏஞ்ஜல்ஸ் வந்து சேரும் இந்தப் பனிக் கரடிகள் அபூர்வமான பிராணிகளாகக் கருதப்படுகின்றன.

ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் இடத்தில் காட்சிக்காக வைக்கப்படும் இக் கரடிகள் அதன் பின்னர் அமெரிக்காவிலுள்ள பல நகரங்களுக்கு கொண்டு செல்லப்படும்.

ஒலிம்பிக் போட்டிகளுக்காக இங்கு வரும் 142 நாடுகளைச் சேர்ந்த 7800 வீர, வீராங்கனைகளுக்கு சீனவின் பொக்கிஷங்களை காணும் அரிய வாய்ப்பை அளித்ததற்காக சீனவுக்கு நன்றி கூற வேண்டுமென லொஸ் ஏஞ்ஜல்ஸ் நகர மேயர் டொம் பிரட்லே கூறினார்.

(ந)

## 10 ஆவது ஆசிய பெண்கள் கூடைபந்தாட்டம்

### இலங்கை பங்கு பற்றுகிறது

கொழும்பு, ஜூன் 21

சீனவில் நடைபெறும் 10ஆவது ஆசிய பெண்கள் கூடைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இலங்கையும் பங்குபற்றும்.

இச் சுற்றுப் போட்டி சீனவிலுள்ள சங்ஹாய் நகரில் எதிர் வரும் அக்டோபர் மாதம் 13 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.

இந்த கூடைபந்தாட்ட சுற்றுப் போட்டியை சீன மக்கள் குடியரசின் கூடைபந்தாட்ட ஒன்றிணையம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த சுற்றுப் போட்டியில் பங்கு பற்ற இலங்கையின் பெண்கள் கூடைபந்தாட்ட தேசிய அணியொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட இந்த அணி இந்த வாரம் முதல் பயிற்சிகளில் ஈடுபடும்.

பயிற்சிகள் நடைபெறும் மைதானம் பின்னர் அறிவிக்கப்படும்.

(ந)

## இல்ல விளையாட்டு போட்டி

வாழைச்சேனை. ஜூன் 20

மன்னம்பிட்டி தமிழ் வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அதிபர் திரு. அ. கணபதி தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக பொலநறுவை மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. யூ. எஸ். பிலிப் சேனரத்னவும், சிறப்பதிதியாக பொலநறுவை வட்டார தமிழ்ப் பிரிவு கல்வி அதிகாரி திரு. எஸ். எம். பி. முகையதீனும் கலந்து கொண்டனர்.

வள்ளுவர் இல்லம் (பச்சை) 325 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், கம்பர் இல்லம் (நீலம்) 305 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் பெற்றன.

போட்டிகளில் சாம்பியன்களாகத் தெரிவானோரின் விவரம்:—

11வயதுக்குட்பட்ட ஆண்கள்:— ஜே. டபாகரன்.

11 வயதுக்குட்பட்ட பெண்கள்:— கே. வசந்தினி.

13 வயதுக்குட்பட்ட ஆண்கள்.— பி. சந்திரகாந்தன்.

13 வயதுக்குட்பட்ட பெண்கள்:— பி. மனோரம்மா.

15 வயதுக்குட்பட்ட ஆண்கள்:— கே. வசந்தமோகன்.

15 வயதுக்குட்பட்ட பெண்கள்:— எஸ். சகாயநாயகி சியாமலர்.

17 வயதுக்குட்பட்ட ஆண்கள்.— ஆர். பாஸ்கரன்.

17 வயதுக்குட்பட்ட பெண்கள்.— எஸ். சில்வெஸ்டர்.

17 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்:— எஸ். ரவீந்திரன்.

17 வயதுக்கு உட்பட்ட பெண்கள்:— எஸ். பேரின்பநாயகி, ஆர். பத்மினி.

வெற்றி பெற்றோர்களுக்கான பரிசில்களை கல்விப் பணிப்பாளர் திரு. யூ. எஸ். பிலிப் சேனரத்ன வழங்கினார்.

(ந—[illegible])

## கம் உதாவ கரபந்தாட்ட சுற்றுபோட்டி

கொழும்பு, ஜூன் 21

கம் உதாவ விளையாட்டு விழாவுக்காக தேசிய இளைஞர் மன்றம், இலங்கை கரபந்தாட்ட சம்மேளனத்துடன் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்துள்ள கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரை இறுதிப் போட்டிகள் அனுராதபுரியில் நடைபெறவுள்ளன.

இம்மாதம் 23ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை அனுராதபுரியில் ஆண்கள் பிரிவுக்கான அரை இறுதிப் போட்டியும், பெண்கள் பிரிவுக்கான அரையிறுதிப் போட்டியும் நடைபெறவுள்ளது.

ஆண்கள் பிரிவின் அரையிறுதிப் போட்டி அணிகளின் விளையாட்டு அட்டவணை வருமாறு:—

பொல்கஸ்ஹோவிட கபில விளையாட்டுக் கழக அணி, தேசிய இளைஞர் மன்ற "ஏ" அணியுடனும் —

மாதம்பே நியூ சிக்ஸ் விளையாட்டுக் கழக அணி, தேசிய இளைஞர் மன்ற "பி" அணியுடனும் போட்டியிடும்.

பெண்கள் பிரிவில் கொலன்னாவை சென்ட்ரல் விளையாட்டுக் கழக அணி, வெல்லம்பிட்டி மித்ரா விளையாட்டு கழக அணியுடனும் —

மீரிகமை புளு டயமன்ட் விளையாட்டுக் கழக அணி, தேசிய இளைஞர் மன்ற "ஏ" அணியுடனும் அரை இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும்.

(ந)

## சர்வதேச கரபந்தாட்டம்

வெற்றி பெறும் அணிகளுக்கு பணப் பரிசுகளை வழங்கும் முதலாவது சர்வதேச கரபந்தாட்ட சுற்றுப் போட்டி இந்த வருடக் கடைசியில் ஜப்பானில் நடைபெறவுள்ளது.

சர்வதேச கரபந்தாட்ட சம்மேளனம் இதனை அறிவித்தது.

சர்வதேச கரபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ரூபன் அகோஸ்டா இது பற்றிக் குறிப்பிடும் போது கரபந்தாட்டத்தில் பிரபலம் பெற்றுள்ள 8 நாடுகள் இச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளும் எனக் கூறினார்.

(ந)

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறு தோறும் வெளிவரும்

# தமிழ்நாட்டில் இருந்து வெங்காயத்துடன் வந்த கப்பலுக்கு நடந்தது என்ன?

கொழும்பு, ஜூன் 21

இந்தியாவில் இருந்து, இலங்கைக்கு சின்ன வெங்காயம் ஏற்றி வந்த கப்பலுக்கு என்ன நடந்தது?

பிரஸ்தாப கப்பல் கடந்த 9 ஆம் திகதி தமிழ் நாட்டில் இருந்து புறப்பட்டது 13 ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்திருக்க வேண்டும். ஆனால் இது வரை கப்பலுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

"நந்தா மைனா" என்ற பெயரைக் கொண்ட இந்த கப்பலை தேட முடியாமல் இருப்பதாக வர்த்தக கப்பற்றுறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.

இந்தியாவில் இருந்து கப்பல் ஒன்று இலங்கைக்கு வர ஆகக் கூடியது ஐந்து தினங்களே எடுக்கும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதற்கிடையில் 600 தொன் சின்ன வெங்காயம் ஏற்றிக் கொண்டு கப்பல் ஒன்று செவ்வாய் இரவு கொழும்பு வந்து சேர "லங்கா முதித" இன்னும் ஒரு தொகை வெங்காயத்தை ஏற்றிவரும்.

28 ஆம் திகதி "பிளக்" என்ற ஆபிரிக்க கப்பல் ஒன்று 250 தொன் பம்பாய் வெங்காயத்தை ஏற்றிக் கொண்டு வரும்.

வர்த்தக அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் இந்த தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

இதே வேளை 5 ஆயிரம் தொன் வெங்காயத்தை இறக்குமதி செய்ய தனியார் துறையினருக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

(ப-மு)

# உலக அரங்கில் இலங்கையின் பங்குக்கு றேகன் பாராட்டு

## ஜூலை சம்பவம் இனி இல்லை என ஜே. ஆர். உறுதி

வாஷிங்டன், ஜூன் 20

உலக அரசியல் அரங்கில், இலங்கை தொடர்ந்தும் ஒரு பலமான நீதி சார்ந்த சக்தியாக விளங்கும் என நம்புகிறோம்.

அமெரிக்க ஜனாதிபதி றொனல்ட் றேகன் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தம்பதியருக்கு, ஜனாதிபதி றேகன் தம்பதியர் செவ்வாய் இரவு இராப்போசன விருந்தளித்து கௌரவித்தனர். மேற்படி விருந்துபசாரத்தில் உரையாற்றிய ஜனாதிபதி றேகன் கூறியதாவது:

— வாஷிங்டனில் இருந்து இக்பால் அத்தாஸ் —

"உண்மையான அணிசேராக் கொள்கையை நாம் வரவேற்கிறோம். அணிசேரா மாநாடுகளில் இலங்கை உண்மைக்கும், நியாயத்துக்கும் குரல் எழுப்பி வந்துள்ளது;

ஆப்கானிஸ்தான், கம்பூஷியா நாடுகளின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று இலங்கை வற்புறுத்தியதை, சர்வதேச அரங்கு வரவேற்றிருக்கிறது.

இலங்கை ஜனாதிபதியின் வருகை, இலங்கை - அமெரிக்க நல்லுறவை வளர்த்திருக்கிறது.

துரித மகாவலித் திட்டமும், சுதந்திர வர்த்தக வலயமும், பொருளாதார நெருக்கடியை தளர்த்த இலங்கைக்கு உதவும் என நம்புகிறேன்.

இவ்வாறு ஜனாதிபதி றேகன் தெரிவித்தார்.

ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன இந்த வைபவத்தில் பேசுகையில் கூறியதாவது:

கடந்த பத்து வருடங்களாக அமெரிக்கா எங்களை மறந்து விட்டது. நான் இங்கு எதையும் கேட்க வரவில்லை.

நாம் எல்லோருடனும் சிநேக பூர்வமாக இருக்க விரும்புகிறோம். நாம் எவருக்கும் எதிரிகள் அல்லர். இது தான் எமது கொள்கை. அமெரிக்க மக்கள் இதனை உணர வேண்டும்.

இலங்கையின் சரித்திரத்தில் பல்வேறு விதமான கஷ்டங்கள் தோன்றின. அவற்றுள் ஒன்று தான் கடந்த ஜூலையில் நடைபெற்ற இனக்கலவரம்.

இது அரசாங்கத்தால் நடத்தப்பட்டதல்ல. காடையர்களால் நடத்தப்பட்டதாகும். அதற்காக வருந்துகிறோம். இது போன்ற ஒரு சம்பவம் இனியும் நடைபெறாமல் இருக்க நாம் எமது மக்களை வற்புறுத்தி வருகிறோம்.

இவ்வாறு திரு. ஜெயவர்த்தன கூறினார்.

இந்த வைபவத்தை அடுத்து "ஜயத்து" என்னும் யானைக் குட்டி, ஜனாதிபதி றேகனுக்குப் பரிசாக வழங்கப்பட்டது.

(க)

## வெள்ளித் தட்டு

ஜனாதிபதி றேகன் தம்பதியர் வெள்ளித் தட்டு ஒன்றை ஜனாதிபதி ஜெயவர்த்தன தம்பதியருக்கு அன்பளிப்புச் செய்தனர்.

றேகன் தம்பதியரின் படமும், அமெரிக்க ஜனாதிபதியின் முத்திரையும் அந்த வெள்ளித் தட்டில் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

(ப)

## புதிய கட்டடம்

புங்குடுதீவு, ஜூன் 20

புங்குடுதீவு மடத்துவெளி சன சமூக நிலையத்திற்கெனப் புதிய கட்டடமொன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

இக்கட்டடம் விரைவில் திறந்து வைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(ல-240)

# ஓய்வு பெற்ற பொலீஸாரை சேவையில் சேர்க்க முடிவு

கொழும்பு, ஜூன் 21

பொலீஸ் திணைக்களத்துக்கு புதிதாக கான்ஸ்டபிள்களை சேர்க்கும் போது ஓய்வு பெற்ற பொலீஸ் கான்ஸ்டபிள்களையும் சேர்க்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

தற்காலிக அடிப்படையில் அவர்கள் சேர்க்கப்படுவார்கள்.

பொலீஸ் திணைக்களத்தில் 3000 பொலீஸ் கான்ஸ்டபிள்கள் இருக்கின்றனர்.

பொலீஸ் திணைக்களத்தால் வருடம் 1200 பேருக்கு மாத்திரமே பயிற்சி அளிக்க முடியும். இதற்கு மேற்பட்டோரை பயிற்றுவிக்க வசதி இல்லை. இதனாலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியின் ஆலோசனைக்கு இணங்கவே பொலீஸ் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றுள்ள 57 வயதுக்கு மேற்படாத பொலீஸ் கான்ஸ்டபிள்கள் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கிறார்கள்.

(மு-11)

## ஆசிரியர் சேவை நீடிப்பு

கொழும்பு, ஜூன் 21

தோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் அறுபது வயதிற்கு

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கிக்கும், வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்று விகிதம் 1984 ஜூன் 19 இல்.

| | | வாங்குதல் | | விற்றல் |
|---|---|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ. | 2516.25 | ரூ. | 2517.75 |

வர்த்தக வங்கிகள் வழங்கும் தந்தி மூல பிறநாட்டு நாணய மாற்று விகிதம் — 1984 ஜூன் 19 இல்.

| | | வாங்குதல் | | விற்றல் |
|---|---|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ. | 2515.60 | ரூ. | 2518.40 |
| 100 ஸ்டேர்லிங் பவுண் | ரூ. | 3458.51 | ரூ. | 3470.08 |
| 100 ஜெர்மன் மார்க்ஸ் | ரூ. | 911-20 | ரூ. | 916.13 |
| 100 பிரெஞ்சு பிராங் | ரூ. | 296.09 | ரூ. | 298.56 |
| 100 ஜப்பானிய யென் | ரூ. | 10.7625 | ரூ. | 10.8209 |

பாவனையாளர்களுடன் வர்த்தக வங்கிகள் தந்தி மூல பிறநாட்டு நாணய மாற்றத்தைக் கடைப்பிடிக்க மத்திய வங்கி வழங்கும் விகிதம்

| | | ஆகக் குறைந்த வாங்கும் விகிதம் | | ஆகக் கூடிய விற்கும் விகிதம் |
|---|---|---|---|---|
| 100 வங்காளதேச டகாஸ் | ரூ. | 99 68 | ரூ. | 100.08 |
| 100 பர்மா கியாட்ஸ் | ரூ. | 309.82 | ரூ. | 311.04 |
| 100 ஈரான் ரியால் | ரூ. | 28.56 | ரூ. | 28.68 |
| 100 இந்திய ரூபா | ரூ. | 228.62 | ரூ. | 229.58 |
| 100 நேபாள ரூபாய் | ரூ. | 156.02 | ரூ. | 156.64 |
| 100 பாகிஸ்தான் ரூபாய் | ரூ. | 181.51 | ரூ. | 182.27 |

# றேகனுக்கு இலங்கை பற்றிய புத்தகங்கள்

வாஷிங்டன், ஜூன் 21

இலங்கையைப் பற்றிய ஐந்து புத்தகங்களை அமெரிக்க ஜனாதிபதி றொனல்ட் றேகனிடம் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கையளித்தார்.

இவற்றில் மூன்று புத்தகங்கள் ஜனாதிபதி ஜெயவர்த்தனவினாலேயே எழுதப்பட்டவை.

இதற்கிடையில் ஜனாதிபதி ஜெயவர்த்தன றேகனுக்கு அன்பளிப்புச் செய்த ஜயத்து" குட்டி யானை இன்று அமெரிக்க டெலிவிஷன் நிகழ்ச்சிகளில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது.

வாஷிங்டன் மிருகக் காட்சி சாலையில் இப்போது விடப்பட்டிருக்கும் இந்தக் குட்டி யானையை அமெரிக்காவின் பிரதான மூன்று டெலிவிஷன் நிறுவனங்களும் இன்றைய ஒளி பரப்பில் காண்பித்தன.

கிருமிகள் தாக்காத விதத்தில் சுகாதாரம் மிக்க சூழ்நிலையில் குட்டியானை விடப்பட்டிருக்கிறது. அதன் அருகில் சென்றவர்கள் காலணிகளை தூரத்தே கழற்றி வைத்து விட்டுச் சென்றதைக் காணமுடிந்தது.

# தரகர் முறையை ஒழித்து

# பால் உற்பத்தியாளர் பூரண

# 28 தமிழ்ப் பாடசாலைகளை

தோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் அறுபது வயதிற்கு மேலும் தொழில் புரியக் கூடிய வகையில் அவர்களுக்கு சேவை நீடிப்பு வழங்க ஆலோசிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அடிப்படையில் சேவை நீடிப்பு வழங்கப்படும் ஆசிரியர்களை, அவர்களின் இடத்திற்கு வேறு ஒரு ஆசிரியரை கல்வித் திணைக்களம் நியமிக்கும் வரை தொடர்ந்து சேவையாற்ற அனுமதிக்கலாம் என தயாரத்ன சம்பள மீளாய்வுக் குழு தனது அறிக்கையில் சிபாரிசு செய்திருக்கிறது.

(ப-ய)

# பால உற்பத்தியாளர் பூரண பலன்பெற வழி செய்வோம்

## தொண்டமான் பேச்சு

கொழும்பு, ஜூன் 21

பால் உற்பத்தி செய்பவர்களே அதன் முழுப் பயனையும் அடைய வேண்டும். இடையில் இருக்கும் தரகர் முறை ஒழிக்கப்பட வேண்டும்.

பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களை அமைப்பதற்கும், அதற்கு வேண்டிய சகல விதமான உதவிகளையும் வழங்க தேசிய பால்சபையும், கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சும் தயாராக இருக்கின்றன.

இவ்வாறு கூறினார் கிராமக் கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான்.

சனிக்கிழமை பொலன்னறுவையில் பல லட்சரூபா செலவில் அமைக்கப்பட்ட செயற்கை முறை சினைப்படுத்தும் நிலையத்தை திறந்து வைத்து அமைச்சர் உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:—

கால்நடை வளர்ப்போரை ஊக்குவிக்கும் முகமாக முன்பு வெளிநாடுகளில் இருந்து சிறந்த ரக எருதுகளை இறக்குமதி செய்தோம். சிறந்தரக பசுக்கன்றுகளை உற்பத்தி செய்தோம்.

ஆனல் எமது நாட்டின் சீதோஷ்ண நிலை ஒத்துக் கொள்ளாததால் அந்த எருதுகள் யாவும் மாண்டுவிட்டன.

எனவே இப்பொழுது வெளி நாடுகளில் இருந்து உயர்ரக எருதுகளின் விந்துகளைத் தருவித்து செயற்கை முறையில் சினைப்படுத்தும் முறையை அறிமுகப்படுத்தியிருக்கிறோம்.

செயற்கை முறையில் சினைப் படுத்தும் நிலையங்கள் பல்லேகலையிலும், பொலன்னறுவையிலும் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டிருக்கின்றன.

செயற்கை முறையில் சினைப் படுத்தும் புதிய முறையினுல் உயர்ரக பசுக்கன்றுகளை உற்பத்தி செய்வதோடு அதிக பாலையும் பெறமுடியும்.

நாம் கடைசிவரை தேயிலை, றப்பர் உற்பத்தி மூலம் மட்டும் வெளிநாட்டுச் செலாவணியைப் பெற முடியும் என நம்பி இருக்கக் கூடாது.

கால்நடை உற்பத்தியாளர்கள் ஒன்றுபட்டு தமக்கென கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து செயல்பட முன்வர வேண்டும். இதற்கான சகல உதவிகளையும் வழங்க நாம் தயாராக இருக்கிறோம். இப்படி திரு. தொண்டமான் கூறினார்.

இங்கு கால்நடைக் கண்காட்சி ஒன்றையும் பார்வையிட்ட திரு. தொண்டமான் இளம் விவசாயிகள் பண்ணையாளர்களுக்கு மத்தியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினரால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளையும் வழங்கினர். (எ-ய)

# 28 தமிழ்ப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய முடிவு

கொழும்பு, ஜூன் 21

நுவரெலியா கல்விப் பிரதேசத்திலிருக்கும் இருபத்தி எட்டு தமிழ்ப் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட இருக்கின்றன.

நுவரெலியா மாவட்ட பிரதேச கல்விப் பணிப்பாளர் ஜனுப் ஓமார்டீன் மேற்படி அபிவிருத்திக்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களைச் சந்தித்து அபிவிருத்தி நடவடிக்கைகள் சம்பந்தமாக உரையாடினர்.

நுவரெலியா மாவட்டம் நான்கு கல்வி வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கல்வி வட்டாரத்திலிருந்து ஏழு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன.

அட்டன் கல்வி வட்டாரத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட தமிழ்ப் பாடசாலைகள் விவரம் வருமாறு:—

ஹைலன்ட்ஸ் ம. வி. சென். ஜோன் பொஸ்கோ ம. வி., தலவாக்கொல்லை த. வி., அக்கரப்பத்தனை ஹோல்புருக் த. வி., கொட்டக்கலை த. வி., லிந்துல த. வி.

மஸ்கெலியா கல்வி வட்டாரத்திலிருந்து சென். ஜோசப் த. ம. வி, சென் மேரீஸ் த. வி, கடுவெல த. வி, நோர்வூட் த. வி, கணபதி த. வி, ஹோர்ன்ஸே த. வி, குரலில த. வி.

கலவான கல்வி வட்டாரத்திலிருந்து ருகல த. ம. வி. உட புசல்லாவ த. வி, கந்தப்பொல ஹைபொரஸ்ட் த. வி, ஹெரஸ்பெட் த. வி, றல்கரனேய த. வி, விடலெஸ்டேலி த. வி.

நுவரெலியா கல்விப் பிராந்தியத்திலிருந்து ஹொலி டிரினிட்டி த.ம.வி. சென். செவியர் த.ம.வி. கபுகஸ்டெல த.ம.வி. கந்தப்பொல மெதடிஸ்ட் த. ம. வி. ரம் பொட த. வி. ஆகியன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களின் வருகையை அதிகரித்தல். படிப்பில் ஊக்கமின்றிக் காணப்படும் மாணவர்கள் நலனில் விசேட கவனம் செலுத்துதல், அவர்களுக்கு மாதாந்த அல்லது தவணை முறையில் பரீட்சைகளை நடத்துதல் —

மாணவர்களின் சுகாதார நலன்களைப் பேணல், போஷாக்குஇன்றியிருக்கும் மாணவர்களுக்கு போஷாக்குள்ள உணவு வகைகளை வழங்குதல் புலமைப் பரிசில்களுக்கு மாணவர்களைத் தயார் செய்வதற்கான நிதியுதவி வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் இவ் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். (எ-ர)

# வர்த்தக அபிவிருத்தி குறித்து பேச்சுவார்த்தை

## அமைச்சர் குழு வங்காளம் செல்லும்

கொழும்பு, ஜூன் 21

வர்த்தக, உணவு, கப்பற்றுறை அமைச்சர் திரு. எம். எஸ். அமரசிறியின் தலைமையிலான உயர் மட்டத் தூதுக்குழு ஒன்று வங்காளதேசம் செல்ல இருக்கிறது.. மேற்படி அரசுடன் இணைந்து செயல்படும் வர்த்தக அபிவிருத்தித் திட்டம் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தவே இத் தூதுக்குழு அங்கு செல்கிறது.

ஜூலை இறுதியில் வங்காளதேசத்தில் இப்பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து ஐந்து நாட்கள் நடைபெறும்.

அமைச்சர் திரு. அமரசிறியின் தலைமையிலான இலங்கைக் குழுவில் வர்த்தக அமைச்சின் செயலாளர் திரு. லக்ஷ்மன் டி மெல், வர்த்தக கப்பற்றுறை இயக்குநர் திரு. டேவிட் சொய்சா, வர்த்தக இயக்குநர் திரு. எம். மரியதாச ஆகியோர் அங்கம் வகிப்பர்.

வங்காளதேசக் குழுவில் வர்த்தக அமைச்சர் ஜனுப் எம். ஏ. மாவின் தலைமையில் அவரின் அமைச்சைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் அங்கம் வகிப்பார்கள்.

இப்பேச்சுவார்த்தையின் போது இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத் தொடர்புகளைப் பலப்படுத்தும் வகையில் இரு நாட்டு பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு கமிட்டி அமைப்பது பற்றியும் ஆராயப்படும். (எ-ய)

# மார்க்கக் கல்வி பெருத முஸ்லிம்களின் எதிர்காலம் இருளடையும்

## பள்ளிவாசல் திறப்பு விழாவில் உரை

பலாங்கொடை, ஜூன் 20

"ஒரு சமூகம் முன்னேற கல்வி மிக அவசியம். முஸ்லிம்களைப் பொறுத்த வரை மார்க்கக் கல்வியை அவர்கள் பெற்றுக் கொள்ளா விட்டால் எதிர்காலம் இருள்மயமாகி விடலாம்.

இவ்வாறு இரத்தினபுரி மாவட்ட அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் பணிப்பாளர் அல்ஹாஜ் ஏ. எம். பளீல் கூறினர்.

தன்ஜன்தென்னையில் நடைபெற்ற பள்ளிவாசல் – அரபு மத்ரஸா திறப்பு விழாவில் உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில்;

"பள்ளிவாசல்களை நாட்டின் எப்பகுதியிலும் நிர்மாணித்து விடலாம். ஆனல் அங்கு தினமும் ஐவேளை தொழுது. அதை ஹயாத்தாக்க வேண்டும். அப்போது தான் பள்ளிவாசலை நிர்மாணித்ததன் பலன் கிடைக்கும்.

"தன்ஜன்தென்னையில் வாழும் சுமார் 35 முஸ்லிம் குடும்பங்களின் தொழுகை, மார்க்கக் கல்வி பெற முடியாத நிலையை உணர்ந்தே நான் இப்பள்ளிவாசலையும் – அரபு மத்ரஸாவையும் நிர்மாணித்துக் கொடுத்தேன்.

"நான் இப்பணியை அல்லாஹ்வுக்காகவே செய்துள்ளேன். இப்பகுதி மக்கள் இவற்றை நல்ல முறையில் பயன்படுத்தி, தங்களது இளம் பாலகர்களுக்கு மார்க்க கல்வியைக் கற்க ஊக்கம் அளிக்க வேண்டும்.

"தவருமல் ஐவேளை தொழ வேண்டும். அப்போது தான் இதனுல் பலன் கிடைக்கும்" என்றார்.

ஜனுப் எஸ். எம். மர்சூக், ஜனுப் ஹாரிஸ் மவ்லானு, அல்ஹாஜ் ஏ.எம். சாஹுல் ஹமீத் அல்ஹாஜ் ஏ. ஸி. எல். எம். செயின் (கபூரி), அல்ஹாஜ் எம். கே. ஈ. அபுல் ஹசன் (காஷிரி) ஆகியோரும் கூட்டத்தில் உரையாற்றினர்கள். (ஒ-33)

கிராமோதய சபை மட்டத்தில்

# சுதேச வைத்திய துறை அபிவிருத்தியாகும்

குருநாகல், ஜூன் 20

சுதேச வைத்தியத் துறையை கிராமோதய சபைகள் மட்டத்தில் அபிவிருத்தி செய்ய சுதேச வைத்திய அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இவ்வாறு சுதேச வைத்தியத்துறை அமைச்சர் திரு. வி. ஜே. எம். லொக்குபண்டார கூறினர்.

குருநாகல் கட்டுகம்பள வெல்லேபள்ளே ஆயுள்வேத ஆஸ்பத்திரி அண்மையில் திறந்துவைக்கப் பட்டது. சுதேச வைத்தியத்துறை அமைச்சர் இதனைத் திறந்து வைத்தார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

வைத்திய தேவையின் அன்றுட அதிகரிப்பும், வைத்திய சேவையின் அவசியமும் இருந்து கொண்டே இருக்கின்றன.

அதிகரிக்கின்ற சுகாதார நடவடிக்கைகளை அரசாங்கம் பல வகையில் ஈடுசெய்ய வேண்டியிருக்கிறது.

ஆங்கில வைத்தியத்தின் வளர்ச்சிபோல் ஒரு காலத்தில் எமது நாட்டிலும் சுதேச வைத்தியமுறை வளர்ச்சியடைந்து காணப்பட்டது.

மீண்டும் நாட்டு மக்கள் சுதேச வைத்திய முறையில் நாட்டம் கொண்டிருக்கின்றனர்.

இப்படி அவர் கூறினர்.

குருநாகல் மாவட்ட அமைச்சர் திரு. காமினி ஜெயவிக்கிரம பெரேரா உட்பட மற்றும் பலர் அங்கு பேசினர். (எ-138)

நீண்ட காலம் உழைக்கும் இரட்டை போல் பெயாரிங்ஸ்

ஊஷா சீலிங் மின் விசிறிகள்

140 செ. மீ. (56") ரூபா. 1475/-

தொகையாகக் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு.

ரெய்மூ சன்ஸ் லிமிட்டெட்

88A, மெயின் வீதி, கொழும்பு-11.

தொலைபேசி: 25060—26643

தினபதியிலும், சிந்தாமணியிலும் (மூலம் குறிப்பிடாது) பிரசுரிக்கப்படும் வெளிநாட்டுச் செய்திகள் அனைத்தும் பி. பி. சி., அ. இ. ஜ., டி. பி. ஏ. என். எஸ்.-வெ தூ.நி. ஆகியவற்றிலிருந்து கிடைப்பனவாகும்.

இப்பத்திரிகையை அச்சிட்டுவெளியிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு — 12. (இலங்கை) தபாற்பெட்டி 1613. வெளியிட்ட திகதி 21 ஜூன் 1984

Dinapathi, 5, Gunasena Mawatha, Colombo 12 P. O. Box 1613.